விலை 20/=
ISSN-2613-828X

YARL GALLERY

# யாழ் களரி

යාල් ගැලරි

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 01 | மாசி 2018 | களரி: 02



## வெள்ளம், வறட்சிக்கு தீர்வுதான் என்ன?

## வெல்லப்போவது யார்?

தவக்கால ஆற்றுகை திருப்பாடுகளின் காட்சி

## காதலர் தினம்

## ஜெனீவாவில் இலங்கைக்கு அழுத்தம்

நீ உருவாகி பிறரை உருவாக்கு

# மார்ச்சில் ஜெனிவாவில் இலங்கைக்கு அழுத்தம்

## கனேடிய பிரதமர் ஜஸ்ரீன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையால் இலங்கை குறித்து எடுக்கப்படும் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கைக்குக் கடுமையான அழுத்தம் கொடுக்கப்படும் என கனேடியப் பிரதமர் ஜஸ்ரின்ட் ரூடோ தெரிவித்துள்ளார். ஜெனிவா மனித உரிமைச் சபை கூடவுள்ள நிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். தைப்பொங்கலையும் தமிழ் மரபுத் திங்களையும் முன்னிட்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கரி, ஆனந்தசங்கரி உட்பட, சமஸ்டி லிபரல் கட்சியின் றொறன்ரோ நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேர் ஏற்பாடு செய்திருந்த வரவேற்புபசார நிகழ்வு ஸ்காபறோவில் இடம் பொற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் நம்பிக்கையைக் கொண்டிருக்கக் கூடிய பொறுப்புக் கூறல் பொறிமுறையை தேவையென்ற விடயத்தில் தனிப்பட்ட ரீதியில் தாம் உறுதியாக இருப்பதாக கூறினார். கறுப்பு யூலையின் 35 ஆம் ஆண்டு. இவ் ஆண்டில் நினைவு கூறப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர் தமிழர்களின் வருகை கனடாவிற்கு நல் வாய்ப்பாக அமைந்ததெனவும் குறிப்பிட்டார்.


மேற்குலக நாடுகளில் தைப்பொங்கலையும் தமிழ் மரபுத் திங்களையும் முன்னிட்டு நடத்தப்பட்ட வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட முதலாவது பிரதமர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே வேளை ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்ற விசாரணை தொடர்பான விடயங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் பற்றி இலங்கை அரசாங்கத்திற்கு கடும் அழுத்தம் கொடுக்கப்படவுள்ளதாக ஜெனிவா தகவல்கள் கூறுகின்றன.

நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்கும் விடயத்தில் மைத்திரி - ரணில் நல்லாட்சி அரசாங்கம் எவ்வாறு செயற்படுகின்றது என்பது குறித்து அந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

நமது நிருபர்: **இ.ராஜன்**

# உலகத்தமிழ்ப் பண்பாட்டு கலை இலக்கியப் பெருவிழா




உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலங்கை நடாத்திய கலை இலக்கிய பண்பாட்டுப் பெருவிழா 27.01.2018 சனிக்கிழமை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பாரம்பரியத்தை பறைசாற்றும் யாழ் களரியின் "சங்கிலிமன்னன்" அலங்கார ஊர்திப் பவனியும் மற்றும் கலை இலக்கிய சொற் பொழிவுகள் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடன நாடகங்கள் மூத்தகலைஞர்கள், அறிஞர்கள் கௌரவிப்பும், இன்னும் பல சிறப்பு நிகழ்வுகளும் சிறப்புற நடைபெற்றது.

# என்றைக்கும் அரசியல் வேண்டாம் என்றிருக்கும் நிலைவேண்டாம்

## பல்சமய கருத்தாடல் நிலையம் விடுத்துள்ள ஊடக அறிக்கை

அரசியல்வாதிகள் செய்த அநீதிகள் ஊழல்கள் மோசடிகளால் அரசியல் என்பது மக்கள் வெறுக்கும் ஒன்றாக காணப்படுகின்றது. அரசியல் என்றால் ஆபத்து என்று நினைப்பது. மக்களுக்கு ஆபத்தாகவே மாறக்கூடியதாகும் காரணம் பிழையானவர்கள் பதவிகளில் வந்த பிறகு தவிப்பு மக்களுக்குத்தான். ஒரு நாள் வாக்களிக்க வேண்டும் அதற்கு ஒரு மாதம் பிரச்சாரங்களை அவதானிக்க வேண்டும் அப்போது தான் அதில் யார் நல்லவர்கள் சமூகத்தில் இறங்கி வேலை செய்தவர்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும். முகத்தைப் பார்க்காமல் அவர்களது கொள்கைகளை பார்க்க வேண்டும். அரசியலில் இருந்து மக்கள் ஒதுங்குவதை தவிர்த்து நல்ல தலைவர்களை தெரிவு செய்வது எமது கடமை மட்டுமல்ல உரிமையும் ஆகும். மக்கள் தமக்கு பிடித்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். ஒவ்வொருவரிற்கும் எங்களை ஆளப்போகும் சமூக பொருளாதார கட்டுமானங்களை தீர்மானிக்கப் போகின்றவர்களை தெரிவு செய்வது மக்கள் கைகளில் மட்டும் தான் என பல்சமயக் கருத்தாடல் நிலையம் தெரிவித்துள்ளது.

# சர்வமத இளையோர் சமாதானப் பாசறை



சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகமான CPBR நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் உள்ள சர்வமத இளையோர்களுக்கான சமாதானப் பாசறை அண்மையில் கொழும்பில் சிறப்புற நடைபெற்றது. இதில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் இளையோர்கள் மற்றும் புகைப்படகுழு இளையோர்கள் கலந்து சிறப்பித்தனர். வளவாளர்களாகவும் ஏற்பாட்டாளர்களாகவும் பேராசிரியர் ஜெயந்செனவிரத்ன மற்றும் டிஷானி ஆகியோர் இலகுபடுத்தினர்களாக இளையோரை நெறிப்படுத்தினர்.




# குருநகர் கிராம அபிவிருத்திச் சங்கம்



குருநகர் கிராம அபிவிருத்திச்சங்க கட்டடம் யாழ்ப்பாணம் தண்ணீர்த்தாங்கி வீதியில் அமைக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. விரைவில் திறப்பு விழா நடைபெறவுள்ளதாக மேற்படி சங்கத்தின் தலைவர் கிறீஸ்த்தோப்பர் தெரிவித்தார்.

# யாழ் களரி

யாழ் ගැලරි YARL GALLERY

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்றின் |
பொறுப்பாசிரியர்: வேதநாயகம் சஞ்சீவதனுசன் |
வடிவமைப்பு: மு.சதீஸ்குமார் | ஜோய் கிசோன்
பதிப்பு: யாழ்களரி வெளியீட்டகம். முத்து பிறின்டேர்ஸ்
muthuprint@gmail.com
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் | பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை
jaffnarakaswaram@gmail.com


## மனிதத்துவப் பயணத்திற்கு பலம் சேர்ப்போம்

யாழ்களரி இரண்டாவது இதழ் உங்கள்கரம் பற்றுவது கண்டு மகிழ்வடைகிறோம். யாழ்களரி மாதப்பத்திரிகை வெளிவர ஊக்க மூட்டிய பெரியார்கள், உபகாரிகள், நண்பர்கள், வாசகர்களின் பங்களிப்பு எமக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. மனிதத்துவப் பயணத்திற்கு பலம் சேர்க்க எமது ஒவ்வொரு முயற்சிக்கும் வாசகர்களின் பகிர்தலே யாழ் களரியின் எதிர்பார்ப்பாகும். எமது நாட்டில் இளைஞர்கள் மீது குற்றப்பழி சுமத்துவதை விட அவர்களை நல்வழி காட்ட முன்வர வேண்டியது பொறுப்புள்ள ஒவ்வொருவரின் கடமையாகும். இதனை கலைபண்பாட்டு ஊடகவெளி மூலம் இளையோரை ஆக்கபூர்வமான திசையில் பயணிக்க மேற்கொள்ளும் முயற்சியே யாழ் களரியின் நோக்கமாகும்.

அன்பார்ந்த உறவுகளே! உங்கள் பங்களிப்பு மிக்க செயற்திட்டங்கள் மூலம் வடகிழக்கு இளையோர்களிற்கு விழிப்புணர்வு செயற்பாடுகள், விசேட கலைசார் பயிற்சிகள் வழங்குவதற்கு உங்கள் அனுசரணையை எதிர்பார்க்கின்றோம். எமது இளையோர்கள் இன்று திசைமாறும் வகையில் கண்ணுக்குத் தெரியாத சக்திகள் அவர்களை பீடித்துள்ளது. இவற்றிலிருந்து பாதுகாப்புத் திட்டங்களை கலைமூலம், பல்சமைய நட்புறவுகள் மூலமும் நேரான சிந்தனையை வளர்க்க வேண்டும். போனது போக,இனிவரும் காலத்தை ஒளிமயமாக்கும் கடப்பாடு எம் ஒவ்வொருவரையும் சார்ந்தது.

ஒரு மனிதன் தன்னுடைய இனத்தை, மதத்தை, தன்னுடைய கலாசார பண்பாட்டு விடயங்களை பாதுகாக்கவும், கற்றுக் கொள்ளவும், கற்றுக் கொடுக்கவும் உரிமையுடையவன், அதோடு ஏனைய இனங்களின், மதங்களின், கலாசார பண்பாட்டு விழுமியங்களை மதிக்கின்ற கடப்பாடுக்கும் உரித்தானவனாவான்.

எனவே எமது மனிதத்துவத்தின் மூலம் நாம் உருவாகி மற்றவரையும் உருவாக்கும் பயணத்தில் உங்கள் ஒவ்வொருவரின் கரங்களையும் எமது கரங்களுடன் பற்றிக்கொண்டு 'நான்' என்ற நிலையிலிருந்து 'நாம்' என்ற நிலைக்கு பலமுடன் பயணிக்கவே பாலம் அமைக்க முனைகின்றோம்.இன்று எமது சூழலில் மற்றவரை குறை கூறும் மனோபாவம் தான் காணப்படுகின்றது. தமது குறைகளை ஏற்றுக்கொள்வதும், மாற்றிக் கொள்வதும் கடினமாகப் போயுள்ளது. இந்த நிலையில் கருத்தாடல் மிகவும் அவசியமாகின்றது. புரிந்துணர்வுடன் கூடிய ஒற்றுமையை நாம் எம்முடனும்,மற்றவர்களுடனும் எல்லைகள் கடந்து குறுகிய வட்டங்களைத் தாண்டி கட்டி எழுப்ப கரங்களை இணைப்போம். உங்கள் கருத்துக்களையும் பகிருங்கள் ஆரோக்கியமான முறையில் 'கருத்தாடல்' செய்வோம்.மனிதத்துவத்தை கட்டி எழுப்ப கரம் கோர்த்து பயணிப்போம் வாருங்கள்.



# உள்ளூராட்சி தேர்தலில் வெல்லப்போவது யார்?

ஆண்டுகள் பல கடந்து உள்ளூர் ஆட்சி தேர்தலில் ஜனநாயக மக்கள் ஆட்சியை கைப்பற்ற பல கட்சிகள், சுயேச்சைகள் முட்டி மோதும் தேர்தலில் மாசி 10ம் திகதி விடை காண அன்று வெல்லப் போவது யார்? மக்களா? வேட்பாளர்களா? கட்சிகளா?

வேட்பாளர்கள் தெரிவில் பல தில்லு முல்லுகள். மக்கள் செல்வாக்கை விட, கட்சி அரசியல் வாதிகளின் செல்வாக்கும், பதவிக்காக கட்சி மாறியோரும், பதவி மாறியோரும், வட்டாரத்தில் முகம்தெரியாத வேட்பாளர்கள் மத்தியில் அதிக மக்களின் அலட்சியப் போக்குடன் நகரை, கிராமத்தை, பிரதேசத்தை சுத்தப்படுத்த, சுகாதார பணிகளை மேம்படுத்த வீதி திருத்தத்தை மேற்கொள்ள அக்கறைப்படும் வேட்பாளர் தொகை 3358, தெரிவாக இருப்போர் 402 முட்டி மோதுவோர் முழுமையாக ஒருநாள் சிரமதான பணியில் ஈடுபட்டாலே பல பகுதி சுத்தப்பட்டிருக்கும். இவர்களில் எவர் பொதுப்பணிகளில் மக்களுடன் இணைந்து செயற்படுவார்கள் என்பதே எதிர்பார்பாய் உள்ளது. இதிலும் உயர் பதவி கிட்டாத நிலை வந்தால் தெரிவானவர்கள் கூட்டம் ஓடி ஒளிந்து விடுவாரோ என்ற சந்தேகங்களும் ஞாயமானதே.

மக்களின் மௌனத்தின் விடைகள் தெரிய மாசி 10 வரை வேட்பாளர்களின் கனவு கோட்டை நிறைவேற காத்திருக்கின்றது. இவற்றுள் மகளிர் வேட்பாளர்கள் தெரிவு கட்டாயத்தின் பேரில் நிரப்பப்பட்டார்களே அன்றி தூரநோக்குடன் முன் ஆயத்த நிலையில் உருவாக்கப்பட்டவர்கள் மிக அரிதே. இப்பணியை ஒரு தொழிலாக மேற்கொள்ள முன்வந்தவர்களும், ஓய்வுகால வேலையாக தேர்ந்தெடுத்தவர்களுமே அதிகமாக உள்ளனர். ஊரில் உள்ள இளையோரை முன் கொண்டுவர கட்சிகள் முன்வர முடியாததும் பதவி போட்டிகளால் உட் கட்சி மோதல்களுடன், மௌன போட்டிகளும் சந்தி சிரிக்க வைக்கிறது.

மக்களை விழிப்பூட்ட முன்வர வேண்டிய பொது அமைப்புக்கள், சமூக தலைமைகள், சமய வழிகாட்டிகள் தம் சூழலில் நல்ல தலைவர்களை உருவாக்கி அறிமுகப்படுத்த தவறிவிட்டார்களா? என்ற ஆதங்கம் வேதனையாகவே உள்ளது. புதிய இளம் தலைவர்களை உருவாக்க வேண்டிய சந்தர்ப்பங்களை தவறவிட்டு குரல் கொடுப்பிலும், கொடி கட்டவுமே பயன்படுத்தப்படும் இளமைகளும் தமது தவறுகளை உணரும் போதுதான் புத்தாக்கமுள்ள பணியாளர்கள் எமது பகுதியை வழிநடாத்த முடியும்.

வெற்றி பெறப்போவது மக்கள் தான் என்பதனை அலட்சியப்படுத்தாது, வாக்களிப்பதிலும் நல்ல தலைமைகளை தெரிவு செய்வதிலும் விழிப்புடன் செயல்பட கிடைத்த சந்தர்பத்தை பயனுள்ளதாக்கினால் இவ் வெற்றியை மக்கள் அனுபவிக்க முடியும். தெரிவு உங்கள் கரங்களில் தான் உள்ளது. வெற்றியின் பங்காளராக உங்கள் வாக்குரிமையை பயன்படுத்தி வெற்றி காணுங்கள்.

யாழ்பாலன்

| உள்ளூராட்சி சபைகள் | மொத்தமாக போட்டியிடும் போட்டியாளர்கள் | தெரிவு செய்யப்படும் உறுப்பிளர்கள் |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் மாநகர சபை | 323 | 45 |
| 2. வல்வெட்டித்துறை நகர சபை | 126 | 15 |
| 3. பருத்தித்துறை நகர சபை | 144 | 15 |
| 4. சாவகச்சேரி நகர சபை | 189 | 18 |
| 5. காரைநகர் பிரதேச சபை | 104 | 10 |
| 6. ஊர்காவற்றுறை பிரதேச சபை | 111 | 13 |
| 7. நெடுந்தீவு பிரதேச சபை | 96 | 13 |
| 8. வேலணை பிரதேச சபை | 184 | 20 |
| 9. வலிகாமம் மேற்கு பிரதேச சபை | 252 | 25 |
| 10.வலிகாமம் வடக்கு பிரதேச சபை | 227 | 35 |
| 11. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை | 216 | 28 |
| 12.வலிகாமம் தெற்கு பிரதேச சபை | 230 | 30 |
| 13.வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | 272 | 36 |
| 14.வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை | 238 | 31 |
| 15.பருத்தித்துறை பிரதேச சபை | 160 | 20 |
| 16.சாவகச்சேரி பிரதேச சபை | 279 | 28 |
| 17.நல்லூர் பிரதேச சபை | 207 | 20 |
| Total | 3358 | 402 |

# இளைஞர்களை திசை திருப்புவது மிகப்பெரிய தவறு

இலங்கையின் அரசியல் நிலவரங்களைப் பார்க்கும்போது தம்ழர்களுக்கு எதுவுமே கிடைக்காது என்பது உறுதியாகத் தெரியவருகின்றது. சுய நிர்ணய உரிமை, அதிகாரப் பகிர்வு, கூட்டாட்சி என்பவை இந்த நாட்டைப் பொறுத்தவரையில் நிறைவேற்றப்பட முடியாத காரியங்களாகிவிட்டன. பிரபாகரனால் முடியாததை எமது தமிழ்த் தலைவர்கள் சாதித்துக் காட்டுவார்களென இனியும் நம்பிக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் போர் ஓய்ந்து பல ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழர்களின் வாழ்வியலில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

**வேலையற்ற தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்**

தற்போது வடபகுதியைப் பொறுத்த வரையில் அதிக எண்ணிக்கையான இளைஞர்கள் படித்துவிட்டுத் தொழில் வாய்ப்பின்றி வீணாகப் பொழுதைக்கழித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் சிலர் தவறான பாதையில் செல்வதற்கும் இதுவே பிரதான காரணமாகிறது.முதலில் இவர்களுக்கான தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும். இவர்களது கவனம் தவறான திசையை நோக்கிச் செல்வதைத் தடுக்க வேணடும். இதை விடுத்து அரசியல்வாதிகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இளைஞர்களை அணி திரளுமாறு அழைப்பதும், விவேகமான செயல்களல்ல.

உள்ளூராட்சித் தேர்தலிலும் இளைஞர்களில் பலர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். ஆர்வமுள்ள இளைஞர்கள் அரசியலில் குதிப்பது தவறான செயலல்ல. ஆனால் தவறான அரசியல்வாதிகளின் பிடியில் அவர்கள் சிக்கிவிடக் கூடாது. மேலும் அரசியல்வாதிகள் இளைஞர்களின் எதிர்காலத்துடன் விளையாடுவது உகந்ததொரு செயலல்ல. இளைஞர்களிடையே மறைந்துகொண்டு அரசியல் செய்வதும் கோழைத்தனமான செயலாகும். அதிலும் தமிழ் அரசியல்வாதிகள் இளைஞர்களைத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவதும் ஏற்கத்தக்கதல்ல. இதனால் ஏற்படப்போகும் எதிர்விளைவுகளுக்கு அவர்களே பொறுப்புக் கூறவேண்டும். இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு அவர்களால் ஒருபோதுமே முடியாது.

ஜோக்கியன்

# இயேசு அடியவன் சறாவின் இறுதி நொடிகள்

**பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள்**

*(கடந்த இதழ்த் தொடர்ச்சி...)*

(யார் யார் என அடையாளம் காண முடியவில்லை) நிலைகுலையச் செய்கின்றது. உலகத்தின் முடிவோ? மீண்டும் தலையில் யாரோ பலமாக அடிக்கின்றார்கள். எழும்ப முயற்சிக்கின்றேன்.

**விடியல்: 04.00 மணி**

எழும்ப முடியாத உறக்கம். கனவு! கறுப்புக் கொடி பிடித்த சிலர் என்னை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் யார் யார் என அறிவது கடினமாய் உள்ளது! சற்று உற்று நோக்கும் பொழுது, அவர்கள் எனது சகோதரர்கள் போல் தெரிகின்றது. நித்திலா அக்கா, தம்பி சக்தி, சூரிய ஜீவன் அண்ணா இன்னும் பலர் கறுப்புக் கொடியை அசைத்த வண்ணம் என்னை நோக்கி வருகின்றார்கள். மரினா அக்கா மட்டும் வழமையான புன்சிரிப்பின்றி தனது சபையின் வெள்ளை உடுப்புடன் வந்து கொண்டிருக்கிறாள். அவர்கள் அனைவரையும் அண்மிக்க முயல்கிறேன். முடிய வில்லை! அப்படி முயலும் ஒவ்வொரு முறையும் ஏதொ ஒரு குழிக்குள் விழுகின்றேன். எழுந்து பார்க்கும் பொழுது யாரையும் காணவில்லை. மீண்டும் தலையில் யாரோ அடிக்கின்றார்கள். திடுக்கிட்டு எழும்புகின்றேன்.

**வைகறை: 05.00 மணி**

உறக்கத்தில் மீண்டும் கனவு. புனித முடியப்பரைச் சுற்றி எதிரிகளின் கூட்டம்! சரமாரியாக கற்களை அவர் மேல் வீசுகின்றார்கள். தனது எதிரிகளை மன்னிதிதுக் கொண்டே வானத்தை மேல் நோக்கிப் பார்க்கின்றார். நானும், அவருடன் சேர்ந்து, வானத்தைப் பார்கின்றேன். என்ன காட்சி! மிகப் பெரும் ஒளி! அந்த ஒளியின் நடுவில் ஓர் உருவம். அதைப் பார்ப்பதற்கு கோடிக் கண்கள் வேண்டும். முடியப்பர், அக் காட்சியில் பரவசமாகிய கோலத்தில், எதிரிகளின் தாக்குதலின் விளைவாக உயிரைத் துறக்கினிறார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த என்னுடைய தலையில் மீண்டும் யாரோ அடிக்கின்றார்கள். திடுக்கிட்டு எழும்புகின்றேன். எனது வலது கை செபமாலையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டிருந்தது. அந் நிலையில் தான் உறங்கியிருப்பேன் போல் தெரிகிறது. எனக்கு அருகில் அருட்தந்தை ஒருவர் வந்து, "என்ன சறா! அடிக்கடி திடுக்கிட்டு எழும்புவதும், பின்பு படுப்பதுமாவே இருந்தீர்! எழும்பும் ஒவ்வொரு முறையும் குழிக்கு மேலே போடப்பட்டிருந்த மரக் குற்றியில் தலை அடிபட்டது. நோ ஏதாவது இருக்கிறதா என்று பாரும் எனப் பரிவுடன் கூறுகின்றார்.

**காலை: 06.00 மணி**

வெளியே சற்று அமைதி நிலவுகின்றது. இருள் இன்னும் முற்றாக நீங்கவில்லை. எம்மோடு இருந்த சிலர் வெளியே செல்கின்றார்கள். காலைக் கடனை முடிப்பதற்கு செல்கின்றார்கள் போலும். சற்று நேரத்தின் பின்பு, குடி நீரும் அள்ளிக்கொண்டு வருகிறார்கள்.

**காலை: 07.00 மணி**

பொழுது விடிந்து விட்டது. பதுங்கு குழிக்குள் இருந்த எல்லோரும் சற்று நின்மதியுடன் காணப்படுகின்றனர். பக்கத்து பதுங்கு குழிக்குள் இருந்த ஒரு சிலர் வெளியே நடமாடுகின்றார்கள். பல நாட்கள் உணவும், நீண்ட இரவுகள் உறக்கமும் இல்லாது களைத்திருந்தது அவர்களுடைய உடல் அசைவுகளில் தென்பட்டது அவர்களது முகங்களிலும் கொட்டை எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்த சோகத்தைக் காணமுடிகிறது.

**காலை: 08.00 மணி**

யாழ் ஆயருக்கும் மன்னர் ஆயருக்கும், நாம் இருந்த இடத்திலேயே உயிருடன் இருக்கின்றோம் என்னும் செய்தியை, தொலைபேசி ஊடாக அறிவிக்கின்றோம். அதற்கு மன்னர் ஆயர் அழுகையுடன் தெரிவித்த பதில் ஆறுதலையும் நம்பிக்கையும் அளிந்தது: "நாம் எல்லா முயற்சிகளையும் எடுத்து விட்டோம். நீங்கள் எங்கு, எந் நிலையில் உள்ளீர்கள் என்பதை எல்லா மட்டத்திலும் அறிவித்து விட்டோம். படை அதிகாரிகள், அரச அமைச்சர்கள், வெளி நாட்டுத் தூதுவர்கள் அனைவருடனும் தொடர்பில் இருக்கின்றோம். மனம் தளர வேண்டாம். கடவுளை மன்றாடிக் கொண்டிருங்கள். அவர் தான் உங்களை இனிக் காப்பாற்ற முடியும்." அச் செய்தியைப் பற்றி நாம் எமக்குள் உரையாடிக் கொண்டிருந்த பொழுது, கடற்கரைப் பக்கமாக இருந்து படையினர் இருவர் எமது பதுங்கு குழியை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். முன்னைய படையினரைப் போல் துப்பாக்கி ஏந்தி இருந்தும், எங்களை நோக்கியோ வானத்தை நோக்கியோ சுடாமல், எமது பதுங்கு குழியை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். மிக அருகில் வந்து, "நீங்கள் குருக்களா?" என வினவுகின்றனர். நாம் அச்சம் தவிர்ந்தவர்களாக தலையாட்டுகின்றோம். படைத் தளபதி ஒருவர் தம்மை அனுப்பியதாகவும் எங்களைத் தேடியே வந்ததாகவும் கூறுகின்றார்கள். அத்துடன் ஓர் எச்சரிக்கையும் விடுக்கின்றனர்: "வெளியே நடமாட வேண்டாம். கண்ட இடத்தில் சுடுவதற்கு இராணுவத்தினருக்கு உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. உங்களை கண்டாலும் சுடுவார்கள். நாம் திரும்பி படைத்தளபதியிடம் சென்று நீங்கள் தங்கியிருக்கும் சரியான இடத்தை தெரியப்படுத்துவோம். உங்களை நாம் வந்து அளைத்துச் செல்லும்வரை நீங்கள் வெளியே செல்ல வேண்டாம்."

**காலை: 09.00 மணி**

இனம் தெரியாத நிம்மதி! விரைவாக எமது சிலுவைப் பயணம் ஒரு முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கையின் ஒளி அனைவர் முகங்களிலும் வீசத்தொடங்குகிறது. இடத்திற்கிடம் மாறிச் சென்ற பொழுது எம்மிடம் இருந்த பொருட்கள் பலவற்றை கைவிட்டு வரவேண்டிய கட்டாயம் இருந்தது. இப்பொழுது, எம் ஒவ்வொருவரிடமும் 'எம்முடையது' என எஞ்சியிருந்த அற்ப சொற்பத்தைத் தேடி ஒன்று சேர்த்து ஒரு பொதிக்குள் போட்டுக் கட்டும் பணியில் தீவிரமாக ஈடுபடுகின்றோம்... ஏனோ தெரியவில்லை நேரம் மெல்ல மெல்ல அரக்கிக் கொண்டு இருக்கின்றது. "உள்ளே இருங்கள் நாங்கள் வந்து உங்களை அளைத்துச் செல்வேம்" என ஆறுதல் மொழி கூறிச் சென்ற படைவீரர் எவரும் இன்னும் ஏன் வரவில்லை என்ற கேள்வி எழும்புகின்றது. மணித்துளிகள் செல்லச் செல்ல, ஏமாற்ற உணர்வு எம்மில் துளிர்விடுகின்றது. பொறுத்திருந்து பார்ப்போம். நல்லதே நடக்கும் என்று ஒரு புறமும், பல்லாயிரம் மக்களுக்கு நடந்ததுதான் நம்முடைய விதியும் என்ற அச்சம் மறுபுறமும் பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. எதிர்பார்த்து எதிர்பார்த்து நிம்மதி இழந்தவர்களாக எம்முள் பலரும் மாறுகின்றனர். நானும் அதற்கு விதிவிலக்கு அன்று.

**பகல்: 10.00 மணி**


சடுதியாகக் கிளம்பிய துப்பாக்கிகளின் வெடிச்சத்தம் எம்மைச் சூழ நிலவிய மயான அமைதியைக் குலைக்கிறது. எம்மைச் சுற்றியுள்ள அனைத்து பதுங்கு குழிகளையும் படையினர் சூழ்ந்து கொண்டார்கள் போல் தெரிகிறது. எம்முள் ஒருவர் மிக அவதானமாக நடுக்கத்துடன் வெளியே தலையை நீட்டிக் கண்ணோட்டமிடுகின்றார். அவருடைய முகம் கறுக்கின்றது அதில் அச்ச உணர்வு தென்படுகின்றது. தடுமாற்றத்துடன், "கறுப்புத் துணியை முகத்தில் அணிந்த படைப்பிரிவினர் சுற்றி வளைத்து நிற்கின்றார்கள். இனிச் செபம்தான் எமது ஒரே தஞ்சம்" எனக் கூறுகின்றார். கறுப்புத் துணியால் முகத்தை மூடிப் போரிடும் படையினர் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள், ஈவிரக்கமற்றவர்கள் என்பதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். எனது கையிலுள்ள செபமாலையை இன்னும் இறுக்கமாகப் பிடித்துக்கொள்கின்றேன்.

**பகல்: 11.00 மணி**

எம்முள் ஒரு சிலர் மரண அச்சத்தில் உறைந்திருந்தனர். நாம் நம்பிக்கையை இன்னும் இழந்து போகவில்லை. தாமதிக்காது தீர்க்கமான முடிவை நாம் எடுக்க வேண்டும். "வெள்ளைக் கொடியுடன் வெளியே சென்று படையினருடன் பேசிப் பார்ப்போம்."

*(மிகுதி அடுத்த இதழில்)*

# உயர் விளைச்சல் தரும் நெற்பயிர் செய்கை



நெற்பயிரிலிருந்து உயர் விளைச்சல் பெறவேண்டுமென்றால் பருவத்தில் பயிர் செய்ய வேண்டும். அதற்கு முதலில் நிலத்தை ஆயத்தம் செய்ய வேண்டும். பொருத்தமான நெல் வர்கத்தை தெரிவு செய்ய வேண்டும். சேதனப் பசளைகள்,களை கட்டுப்படுத்தல், பீடைகளை கட்டுப்படுத்தல் போன்றவற்றில் மிகவும் அவதானமாக செயற்பட்டு நல்ல விளைச்சலை அறுவடை செய்ய வேண்டும்.

**பருவத்தில் பயிர் செய்தல்:-**

நெல்லின் அதிக விளைச்சலைப் பெறுவதற்கு சரியான பருவத்தில் விவசாயிகள் அனைவரும் ஒன்றினைந்து ஒரே நேரத்தில் செய்கையில் ஈடுபட வேண்டும்.

அப்போதுதான் மழை நீரை கூடிய அளவிற்கு பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தலாம். சூரிய வெளிச்சத்திலிருந்து பயிர்கள் உச்சப் பயனை ப் பெறலாம்.

நிலத்தை ஆயத்தம் செய்வது புழுதிவிதைப்பா அல்லது சேற்று விதைப்பா என்பதைப் பொறுத்து முறைகள் வேறுபடும்.

முதலாவது தடவையாக உழும் போது அல்லது உழுதபின் சேதனப் பசளையாக வைக்கோல் பசுந்தாட் பசளைகளை இடல் வேண்டும்.

முதலாவது தடவை உழுது 10-14 நாட்களின் பின்னர் குறுக்காக உழவும் இதன்போது உக்கிய சேதனப் பசளையை உக்கிய வைக்கோல், சாணம், கூட்டெரு, பசுந்தாட் பசளைகள் ஏனைய பயிர்கழிவுகள் இடுவது மிகவும் உகந்ததாகும். இதில் சாணம், கோழியெரு, கூட்டெரு இரண்டாவது தடவை உழுதபின் இடவும். முதலாவது தடவை உழுதபின் மண்வெட்டியால் வரம்புகளை செதுக்கிக் கட்டி விடவும். இரண்டாவது தடவை உழுதபின் களியால் பூசிவிடவும் இதனால் வயலில் நீர் தேங்கி இருப்பதுடன் வரம்புகளில் களைகள் முளைப்பதையும் கட்டுப்படுத்தலாம்.



**சேற்று விதைப்பு**

நாற்று நடுவதற்கு முன்பாக வயலைச் சேறாக்கி மேற்பரப்பு மட்டப்படுத்தப்பட வேண்டும். மட்டக்கம்புகளை பயன்படுத்தலாம். வயலில் அதிகளவில் களைகள் காணப்படுமாயின் முதலாவது தடவை உழுவதற்கு முன் களை நாசினியை விசிறலாம்.

**புழுதி விதைப்பு**

முதல் பெய்யும் மழையைப் பயன்படுத்தி தரையை ஆயத்தப்படுத்த முடியும். வயலை நன்கு மட்டப்படுத்துவதால் சீராக நீரை தேக்கி வைக்க முடியும். சிறந்த விதை நெல் முளைதிறன் அதிகமாக இருக்கும். எனவே விவசாயத் திணைக்களத்தின் மூலம் சிறந்த நெல்லைப் பெறலாம்.


சலமோன் ஜோர்ச்

# ஒளிப்படக் கலை

ஜோக்கியன்

ஒவ்வொரு கலைக்கும் ஏதோ வொன்று கருவியாக இருக்கின்றது. எழுத்தாளர்கள் சொற்களை கருவியாக்குகின்றார்கள். அதே போல ஒவ்வொரு கலைஞர்களும் தமது வெளிப்பாட்டுக் கருவியாக தனித்துவமான அழகியலை காட்சி விதானிப்பை வேறு சில வடிவங்களையும் கருவியாகக் கொண்டு செயற்படுகின்றார்கள். அதே போல நாடகமும் மிக அற்புதமான கலை வடிவம். அது நிகழ்த்தும் கணத்தில் பிரம்மிப்பூட்டவல்லது. அதோ போல ஒளிப்படக்கலையை எடுத்துக் கொண்டால் அது பார்க்கப்படும் ஒவ்வொரு கணத்திலும் ஏதோ ஒவ்வொன்றை சொல்கி றது. இந்த உலகத்தை முழுமையாகவும் மிகவும் மெய்சிலிர்க்க வைப்பதாகவும் அர்த்தமுள்ள தாகவும் எமது தேடல்களைக் கண்டுபிடித்து கருத்தாளத்துடன் காட்சிப்ப டுத்தகாண்பியக் கலையான ஒளிப்படக் கலை சிறந்த தொரு கருவியாகும்.

இந்த இடத்தில்தான் ஓவியக்கூறுகளும், கொள்கைகளும் ஒளிப்படக் கலைக்கும் பொருத்தமானதாகக் காணப்படுகிண்றது. குறிப்பாக கோடு, வண்ணம், ஒளித்தகவு, வடிவமும் உருவமும், வெளி, இழையமைவு, சமநிலை, ஒருமை, வெற்றியல்பு, லயம், முதன்மைப் பங்கு, அசைவு போன்றவை ஒத்துப்போகும் பண்புகள் காணப்படுகின்றது. இதில் கருவி மற்றும் வடிவம் வேறுபட்டாலும் இரண்டுமே சிறந்த காண்பியக் கலைகள் தான். எந்தவொரு கலைப்படைப்பையும் உருவாக்குவதற்கு மட்டுமல்ல மற்றவர் உள்வாங்குவதற்கும், ரசிப்பதற்கும், விமர்சிப்பதற்கும் குறைந்தளவானவர்களே முன் வருகின்ற காரணத்தால் இவற்றை பெருமளவில் வளர்த்தெடுக்க ஆர்வாளர்கள் முன்வர வேண்டும். ஒரு ஓவியன் தனது தூரிகையைக் கொண்டு எவ்வாறு வரைகிறானோ அவ்வாறு "கமறா" எனும் கருவி மூலம் ஒளிப்படக் கலைஞன் அந்தப்பணியை மேற்கொள்கின்றான்.



அழகிய கதைப் படங்களை செதுக்குதல் அல்லது கண்டு பிடித்தலானது கற்பனைக்கும் நிஜத்திற்கும் கலைத்துவமான மாஜாயாலத்திற்கும் உட்பட்டு உள்ளது. உள்ளவாறே பதிவு செய்யப்படுகிறது. சில வேளைகளில் உள்ளது உள்ளவாறே இருந்தாலும் அதற்கான பார்வைக் கோணங்களில் அது வேறென்றாகவும் பல் பொருள் கூறும் படைப்பாகவும் காணப்படும். சமூகத்தின் அன்றாட செயற்பாடுகள் கலையாக பதிவு செய்யப்படுகிற போது வாழ்க்கையின் அழகிய தருணங்கள் ஆவணப்படுத்தப் படுகின்றது.

புகைப்படவியல் என்பது ஒளியினால் வரையப்படுகின்ற ஒரு படமாகும். புகைப் படத்தை எடுப்பதில் பல்வேறு காரணிகள் பிரதானமானவையாக செல்வாக்குச் செலுத்துகின்றது. இதில் வெளித்தோற்றம், காட்சி நோக்கு, சேர்மானம், நிறம், ஒளியினுடைய தரம், மற்றும் நோக்கும் திசை என்பன இன்றியமையாத காரணிகளகும்.

புகைப்படம் அல்லது ஒளிப்படம் என்பது எமது மனதில் எழும் எண்ணங்களைக் கொண்டு ஒரு கருவியினால் எடுக்கப்படுகின்ற ஒரு ஓவியமாகும். புகைப்படம் ஒன்றை எடுப்பத்கு இதுதான் தகுந்தமுறை என்று ஒரு வரையறுக்கப்பட்ட முறையில்லை. ஒரு புகைப்படக் கலைஞன் தான் எவ்வாறு எடுக்கவேண்டும் என்று நினைக்கின்றானோ அதற்கோற்றால்போல் அவன் அந்தப் புகைப்படத்தை எடுக்க முடியும்.

சூரிய ஒளியில் இருந்து தெறிக்கின்ற கதிர்கள் வெவ்வேறான அளவில் மின் காந்த கதிர்களாக புகைப்படக் கருவியின் உதவியுடன் பெறப்படுகின்றது. சில நேரங்களில் எமது வெற்றுக்கண்களால் பார்க்கவோ, அவதாணிக்கவோ முடியாதவற்றைக் கூட புகைப்படக் கருவியூடாக படமாக்க முடிகின்றது.

சூரிய ஒளியில் உள்ள மூல வர்ணமான ஏழு வர்ணங்கள் பெறப்படுகின்றது. இந்த ஏழு வர்ணங்களினதும் துனை இன்றி ஒரு சிறந்த புகைப்படத்தை மிக துல்லியமாக எடுப்பது என்பது மிகப்பெரிய சவாலாகும். விசேட விதமாக வெள்ளை நிறத்தினை இயற்கையாகவே எம்மால் எத் திசையிலும் காண முடியும். எந்த ஒரு பொருளாக இருந்தாலும் அவை ஒளியின் துனை கொண்டே தெளிவாக பிரதிபலிக்கின்றது. புகைப்படவியலில் ஒளியின் செல்வாக்கு மிகவும் இன்றியமையாததாக இருப்பதால்தான் ஒள்ப்படக் கலை என்றும் அழைக்கின்றோம்.

ஒரு நல்ல புகைப்படக்காரராக விளங்க வேண்டும் என்றால் அதிக விலை உள்ள "கமறா" இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை தலை சிறந்த படங்களை ஒரு சிறிய கமறாவல் எடுக்க முடியும்.

புகைப்படத்தை விளங்கிக்கொள்ளல் என்பது அவசியமானது. ஒவ்வொருவருடைய பார்வையிலும் வெளிப்படும் கருத்து கலைத்திறனுடன் காணப்பட வேண்டும். ஓர் உருவத்தில் பல விதமான கருத்து இருக்க வேண்டும்.புகைப்படக் கலை என்பது தனி மொழி இதனை ஒவ்வொருவரும் இலகுவில் கற்றுக் கொள்ளவும் விளங்கிக் கொள்ளவும் முயல வேண்டும்.

# தமிழர் மரபுத்திருநாள் 2018



தமிழருடைய கலாச்சாரத்தையும் தொண்மைகளையும் உலகுக்கு பறைசாற்றும் முகமாகவும் நமக்கு உணவழிக்கும் சூரியபகவானுக்கும் உழவர்களுக்கும் நன்றி செலுத்தும் முகமாகவும் தமிழர்களின் கலாச்சாரங்கள் காலநதி ஓட்டத்திலே சிதைந்து கொண்டு செல்லும் இவ்வேளையில் "தமிழையும் கலாச்சாரத்தையும்" காக்க இவ்வகை யான எமது பாரம்பரிய நிகழ்வுகளை செய்வதற்கு கடமைப்பட்டவர்களாக நாம் உள்ளோம்.

அந்த வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் 2018ம் ஆண்டிற்கான தமிழர் மரபுத்திருநாள் சனிக்கிழமை (20.01.2018) மதியம் 2 மணியளவில் THE ARCHBISHOP LANFRANC ACADEMY, MITCHAM ROAD, CROYDON, CR9 3AS எனும் இடத்தில் மிக விம ர்சையாக நடைபெற்றது.

இதன் போது வருகை தந்திருந்த பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களான Croydon North laber party MP Hon Mr. Steve Reed, croydon laber party broad green secretary and Ethinic minority forum treasurer Hon MR. Rajagopal, Croydon North laber party secretary Hon Mrs. Jenet Campbell, Ethinic minority forum chairman Catherin Wilson, Mr. David Thayaparan Solicitor and secretary of Croydon Tamil community organisation ஆகியோருக்கு தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்பான ஆவனாங்களை தாங்கிய பேராசிரியர் ராமு மணிவண்ணன் அவர்கள் எழுதிய SRILANKA: HIDING THE ELEPHANT எனும் நூலும் வழங்கப்பட்டது. சிவகுமாரன் தமிழ் பாடசாலை மாணவிகள் மற்றும் நடராஜா நர்த்தன கலாலயா மாணவர்கள் ஆகியோரின் நடனங்கள், தமிழீழ எழுச்சிப்பாடல்களா, எழுச்சி நடனங்கள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன இதன் போது நீதிக்கான நிதி வழங்கல் எனும் அதிட்டலாப சீட்டிழுப்பில் அதிட்டம் பார்க்கப்பட்டு அதிட்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களின் விபரங்கள் முதற்பரிசான 10 பவுண தங்கத்தினை பெற்றுக் கொண்ட வெற்றியாளர் 51358 மேலும் 10 பேருக்கான ஒரு பவுண் தங்கத்தினை பெற்றுக் கொண்ட வெற்றியா ளர்கள் 1வது வெற்றியாளர்: 51489, 2வது வெற்றி யாளர்: 55231, 3வது வெற்றியாளர்: 51699, 4வது வெற்றியாளர்: 52430, 5வது வெற்றி யாளர்: 52001, 6வது வெற்றியாளர்: 61729, 7வது வெற்றியாளர்: 51674, 8வது வெற்றியாளர்: 50698, 9வது வெற்றியாளர்: 56021, 10வது வெற்றியாளர்: 52830 இதற்கு மேலதிகமாக 4ஆறுதல் பரிசுகளை பெற்றுக் கொண்ட வெற்றியாளர்கள் 1வது வெற்றியாளர்: 55466, 2வது வெற்றியாளர்: 54081, 3வது வெற்றியாளர்: 50435, 4வது வெற்றியாளர்: 58794, மேலே குறிப்பிட்ட வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர் அதிட்டலாப சீட்டிழுப்பு தொடர்பான விபரங்களுக்கு: நீதிராஜா (TGTE MP) 07577 996966, மயூரன் 07504 345987, தீபன் 07459 364354, அலுவலகம் 020 7193 6655 இந்த நிகழ்வினை டினுஷன் ஜெயராம், நிதி அமைச்சின் பிரித்தானிய ஒருங்கினைப்பாளர் ஷாமினி ராஜநாதன் ஆகியோர் தொகுத்து வழங்கினர். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் பொங்கல் விழா நிகழ்வு 2015 இல் இருந்து கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

சிறுகதை

மிஷாந்தி செல்வராஜா
அரியாலை

# செல்வி

என்ர நல்லூரானே! எப்பயப்பா என்ற பிள்ளைக்கு கல்யாண வாழ்க்கை தந்து கரையேத்தப்போறாய்?

உனக்கென்னப்பா குறைவச்சேன்?

ஒவ்வொரு வெள்ளியும் உன்ர சன்னிதானத்துக்கு வாறன்.

பத்தாததுக்கு இருபத்தஞ்சு நாள் விரதமும் இருக்கிறன், அடியழிச்சும் கும்பிடுறன், ஏனப்பா நீ இரக்கம் காட்டுறாய் இல்லை?

நல்லூர் ஆலய வாசலில் நின்று கண்ணீர் மல்கி தன் மகளுக்காய் வரம் கேட்டமுதாள் கமலாம்பிகை.

மூத்தவளின்ர கலியானப் பிரச்சினையால இளையவளும் கல்யாணம் ஆகாமல் கன்னியாய் இருக்க வேணும் போல.

ச்சே...........

.............................

மனம் நொந்து அலுத்துக் கொண்டாள்.

என்ர வாழ்க்கை தான் நடுவில போனதென்டா என்ர பிள்ளையளும் வாழாம இருப்பது எந்த தாயால தான் பாத்துக்கொண்டு இருக்க முடியும்?

"என்ர பிள்ள வாழவே இல்லை. வாழ்க்கையை தொலைச்சுட்டாள். வாழ வேண்டிய வயசில வாழாவெட்டியாய் இருக்கிறதை பார்த்து எந்த தாயால நிம்மதியாக இருக்க முடியும்?"

மனம் நொந்து மணலிலே வொற்றுக்காலிலே நின்ற கமலாம்பிகைக்கு மணற் சூட்டு வெய்யில் கூட பெரிதாக தெரியவில்லை போல. அடி கமலாம்பி..............

எப்படி இருக்காய்?

உணக்கு வெயில் சூடு சுடவில்லையோடி?

முதுகில் தட்டி கமலாம்கிகையின் முகத்தைத் திருப்பினாள் அவள் நண்பி சாரதாம்மா.

கமலாம்பிகையின் கண்களில் நிறைந்த கண்ணீர் முகம் சாரதாம்மா மனதை சலனப் படுத்தியது. சாரதாம்மா ஐந்து வருட இடை வெளியின் பின் இன்று தான் கமலாம்பிகையை சந்தித்தாள்.

அவளின் வாடிய முகம், இறுகப்பின்னப்படாத கலைந்த முடி, ஆடம்பரமில்லா தோற்றம் மேலும் அவளைக்காயப்படுத்தியது.

உயிர் நண்பியாயிற்றே.

இத்தனை காலமும் வெளிநாடு சென்றதால் எந்த தொடர்பும் இல்லாமல் இருந்தவள் நானல்லவா.

எங்கட சனம் ஆரும் அயலுக்கு ஓடிட்டினம், கலியாணம் கட்டிட்டினம் என்ட உடனே பேஸ்புக், வைபர், போனில சொல்லுவினம், ஆனா ஆருக்கும் பிரச்சினை, கஸ்ரபடுறாங்க எண்டா சொல்ல மாட்டினம். ம்... என மனதுக்குள் நினைத்தபடி கமலாம்பிகையை தன்னுடன் காருக்குள் ஏற்றி அழைத்துச்சென்றாள் சாரதாம்மா.

வா, சாரதா. என்ர வீட்டப்பாத்து பழிக்காதே.

பிள்ளை சுபா இஞ்ச வாம்மா,

உள்ளே போய் இருக்கிற மூண்டு கதிரையையும் தூக்கி வாடா.

இந்தாடா, இந்த நல்லூரான் விபூதியை கொண்டே சாமி படத்துக்கிட்ட முதல்ல வையம்மா.

கமலாம்பிகை, சாரதாவின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் பார்த்த சாரதா கவலையுடன் கதிரையில் அமர்ந்தாள்.

கமலா........ இஞ்ச வா.

எனக்கு ஒண்டும் வேண்டாம்.

தேத்தண்ணி ஒண்டும் போடாதே

நான் இன்டைக்கு ஒரு நேரம்.

உண்னோட கதைக்க வேணும்.

கேக்கிறன் எண்டு குறை நினைக்காதே.

முந்தி நாங்க படிக்கேக்க உன்னைப்பார்த்துத்தாண்டி ஆசைப்படுவோம்.

எவ்வளவு கெட்டிக்காரி நீ

எவ்வளவு வடிவாய் உடுப்பெல்லாம் போடுவாய்.

இப்ப ஏனடி உன்ர முகமெல்லாம் வாடி................

தலையைத் திருப்பி சுவரில் மாட்டி இருந்த கமலாவின் கணவனைப் பார்த்தவள் தொடர்ந்து எதுவும் கேக்காமல் கமலாவைக் கட்டியனைத்தாள் சாரதா.

என்ர மனுசன் மோசம் போய் ஐஞ்சு வருச மாச்சு.

அவருக்கு என்ன குறை ராஜா மாதிரி வாழ்ந்த மனுசன் பக்கத்துக் டைக்கு நடந்து போனவர் தான் பாழா போன ரெண்டு வான் ஓடுற சாரதிகள் போட்டிக்கு ஓடி என்ற மனுசனைச்சாகடிச்சு போட்டாங்கள்.

மனதில் விரக்தியோடும் வேதனையோடும் கண்களில் நீரை .அடக்கிய படி வார்த்தைகளை பரிமாறினாள் கமலா.

ஏதோ என்ர வாழ்க்கை முடிஞ்சு போட்டுது.

நான் தான் ரெண்டு பிள்ளையள பெத்துப்போட்டு விதவையா வாழ்றேன்.

ஆனா என்ர மூத்தவள் வாழ்க்கை......................

என்ன என்ன நடந்தது கமலா?

மூத்தவள் செல்வி நான் தூக்கி வழத்தவள் தானே...

என்ற பிள்ளையின்ர வயசுதனே. அவள் ஒரு ஆம்பிளபிள்ளைக்கு தாயாகியும் விட்டாள்.

இது தான் காலம் என்ன செய்யிறது?

செல்வி நல்ல பிள்ளை தானே.

எவ்வளவு அமைதியான பிள்ளை நல்லா இரக்கம் கூட பாப்பாளே.

சரியாய் சொன்னாயடி. அவளட நல்ல மனசால தான் அவள பாவம் பார்க்க யாருமே இல்லாமல் செய்திட்டான் நல்லூரான்.

ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்றே...........

றிங், றிங்"

அட என்ர போன்தான்.

பொறு கமலா வீட்டில இருந்து தான் போன் வருகுது.கதைச்சிட்டு வாறன்

ஹலோ.......

அம்மா எங்கே நிக்கிறீங்க?

கோயிலுக்கு போன உங்கள காணல.

ஐயோ பிள்ளை நான் சொல்ல மறந்திட்டன்.

என்ர சிநேகிதி கமலாவை கோயில்ல கண்டனான்

அதான் அவள பாத்திட்டு அவளட வீட்டில நிக்கிறன்.

நீ சாப்பிட்டுட்டு என்ற உடுப்பு ரெண்டு மூண்டை சித்தப்பா காறில வருவார் அவரிட்ட கொடுத்து விடம்மா.

ஏனம்மா? நான் இன்டைக்கு கமலா வீட்டை தங்கப் போறன்

சரியடா நான் போன் கட் பன்றன். சாரதா அன்ரி, நீங்களா?

எப்ப வந்தீங்கள்?

வாங்க.

தையல் வகுப்பிலிருந்து வந்த செல்வி சாரதா வைக் கண்டதும் சந்தோசத்துடன் வர வேற்றாள்.

சாரதா செல்வியின் தோற்றத்தைக் கண்டு கவலையுடன் கட்டியணைத்து முத்தமிட்டாள். அம்மாடி செல்வி என்ற பிள்ளை வதனியோட வயசு 28 தானே. ஓமன்ரி. நீ இன்னும் கல்யாணம் கட்டலயா? என்ர வாழ்க்கை பற்றி கோக்காதீங்க அன்ரி. சாரதா.....

அவள நினைச்சு தான் நான் கோயில் கோயிலா ஏறி இறங்குறன். எப்பத்தான் முருகன் கரை ஏத்தப் போறாரோ? ம்.....

நீ உள்ள போம்மா செல்வி.

காத்தால வாங்கி வச்ச பாணும் ஒழுங்கா சாப்பிடல

போய் சாப்பிட்டு ஆக வேண்டியத பாரடா.

செல்வி தாயின் சொல்லிற்குக் கட்டுப்பட்டு உள்ளே போனாள். அம்மா போயிட்டுவாறன். ரியூசன் செல்ல ஆயத்தமானாள். சாரதா மனம் நொந்தவளாய் கமலாவின் கையைப் பிடித்தபடி அன்புடன் அவளின் துயரங்களைப் பரிமாறினாள். 24 வயசில காதல் ஒண்டு வந்திச்சு அவளுக்கு. பாவம் என்ர புள்ள ஏதோ தொருவால போன போது வெல்டிங் வேலை செய்யிற சாந்தனை காதலிக்க வேண்டி ஏற்பட்டது. அவ னுக்கு அப்பா அம்மா இல்லாத அனாதை எண்டு சொல்லி என்ர புள்ளய மயக்கி காதல் பண்றேன் எண்டு நடுத்தெருவில கைவிட்டு ஏமாத்திப்போட்டான். என்ர பிள்ள வாழவே இல்லை. வாழ்க்கையை தொலைச்சுட்டாள். வாழ வேண்டிய வயசில வாழா வெட்டியாய் இருக்கிறதை பார்த்து எந்த தாயால நிம்மதியாக இருக்க முடியும்? சொல்லு.என்ன நடந்தது? ஏன் இடையில விட்டவன்? அவனுக்கு சீதனத்தோட பொம்பிள வந்தவுடன் என்ர பிள்ளைய கைவிட்டு இப்ப வேற பொம்பிளயோட குடும்பம் நடத்துறான். இது தான் ஆம்பிளயளட குணம். ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் எண்டது உண்மயாய் போச்சு பாத்தியளோ? கமலா வோட கண்களும் கண்ணீருடன் பதில் கூறியது. அழாதே கமலா. அவளுக் கென்ன வயசா போயிட்டு. எல்லா ஆம்பிளயளும் அப்படி இருக்க மாட்டாங்கள். வேற நல்ல வாழ்க்கைத் துணை ஒண்டு வரத்தான் போகுது. நீ பாரன். அதைத்தான் நான் கடவுள் கிட்ட கேக்கிறன். இப்ப என்ன செய்யிறாள்? செல்வி. செல்வி வெளிவாரி பட்டப்பை முடிச்சிட்டாள். இன்னும் வேலைகிடைக்கல. தையலும் படிக்கப் போறாள். ஆ..... உண்மையாவா? இவ்வளவு பிரச்சினை நடந்தும் பிள்ளைய படிப்பிச்சு விட்டாயே கமலா. உண்மை தான் படிப்பால அவளுக்குக் குறையில்ல. எவ்வளவு படிச்சாலும் பிள்ளைக்கு ஒரு வாழ்க்கைத் துணை கிடைக்க வேண்டுமே. பாவம் அவள் வடிவாய் வெளிக்கிட்டு ஒரு சபைக்குக் கூட போக முடியல. எங்கடசனம் அவள வாழ வெட்டி என்று மனசு நோக காயப்படுத்தி வாழ விடாமல் கஸ்ரப் படுத்துறாங்கள்.

உருக்குள்ள மகளீர் தினம் எல்லாம் செய்து மேடைப் பேச்சுக்கு பெண்கள் வன்முறையை தடுப்போம் என குரல் கொடுக்கிறார்கள். அதெல்லாம் வெறும் பேச்சுத்தான். என்ர பிள்ளைக்கு சமூகம் கொடுக்கிற மதிப்பு. நீ கவலைப்படாதே. அவளட மனசு நோகாமல் நீதான் எல்லாம் பாக்கணும். இன்னும் தட்டிக் கொடு கல்வியால உயரும் போது வாழ்க்கை தானா தேடிவரும் பார் கமலா. மறுநாள் காலை மங்கல கரமாக வரவேற்றது கமலா குடும்பத்திற்கு. சாரதாவும் நல்லாசி கூறி விடைபொற்றுச்சென்றாள். கமலா..... கமலா...... ஓம் அட சியாமளா அக்கா வாங்கோ. என்ன விசயம்? எங்கட செல்விக்கு சாதகம் பொருந்தியிருக்கு. பெடியனும் நல்ல குணமான பெடியன் தான். வேறயாருமில்லை. எங்கட புவனா அக்காவோட மகன் விமலன் தான். அட அவன் இளந்தாரியாயிற்றே. எப்படி என்ர புள்ளய கட்டிக்க சம்மதிச்சான்? அவளும் பட்டதாரி தான் பிறைவற் கம்பனியில வேலை செய்யிறான்.

சின்ன வயசில இருந்து செல்வி மீது பிரியமாம்.

இப்ப அவளட நிலைமை அறிங்சு இன்னும் காதலிக்கிறான். புவனாவும் மகனோட சந்தோசம்தான் தன் சந்தோசம் என முடிவும் சொல்லீட்டாள். நொந்து போன செல்விக்கும், விமலனுக்கும் மங்கல திருநாள் நெருங்கியது. கமலா மனம் கமல மலர் போ ல பூத்துக் குலுங்கியது. செல்வி தான் திருமதி ஆகப் போகும் திருநாளை எண்ணிக் காத்திருக்கிறாள்.

நேர்காணல்

# புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பு இல்லாது இருந்திருப்பின் போருக்குப் பின்னரான எமது மீண்டெழுகை இவ்வளவு சாத்தியமாகி இராது

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு.த.ஜெயசீலன்



**1. அரச மட்டத் தலைவர்கள், பணியாளர்கள் புதுத் தெம்புடன் விரைவுபட்டு செயற்பட உங்கள் எதிர்பார்ப்புகள் எவை?**

அரசபணியாளர்கள் மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெற்று மக்களுக்காக சேவையாற்றப் பணிக்கப் படவர்கள். எனவே அரச பணியாளர்களின் சேவை மக்களை நோக்கியதாக மக்களை முன்னிலைப் படுத்தியதாக இருக்கவேண்டும். அவர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட கடமைகளை உரியமுறையில், உரிய நேரத்தில், வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் செய்தாலேபோதுமானது. தனிமரம் என்றுமே தோப்பாகாது. எனவே ஒவ்வொரு பணியாளர்களும் அர்ப்பணிப்புடன் ஒருங்கிணைந்து தொலைநோக்குடன் மக்களுக்கு வகைசொல்லக் கூடியவர்களாக பணியாற்ற வேண்டும்.



**2. இலக்கிய வாதியாய் உங்கள் பயண அனுபவங்கள்?**

கணந் தோறும் ஒவ்வொரு அனுபவங்களை காலமும் இயற்கையும் தந்தபடிதான் நகர்கிறது. அவற்றை மனிதர்கள்தாம் உணர்வதாக இல்லை. இலக்கிய வாதி அல்லது ஒரு கலைஞன் இவ் அனுபவங்களை ஓரளவு உணர்ந்து புரிந்து தெளிந்து கொள்ளும் ஆற்றல் கைவரப் பெற்றவனாக விளங்குகிறான்.

இது எனக்கு ஒரு வாய்ப்பாகவும் அந்த அந்தக்கணங்களின் அனுபவங்களினூடாக வாழ்க்கையை இலக்கிய கண்ணாடி ஊடாக பார்க்கும் வசதியை வழங்கியதாகவும் இருக்கிறது.

இவ் இலக்கிய அனுபவத்தினூடாக நானடைந்த இன்பங்களும் துன்பங்களும், நன்மைகளும் தீமைகளும், வெற்றிகளும் தோல்விகளும் ஏராளம். இவ் அனுபவங்களாம் அனற்சுவாலைகளே என்னை நித்தம் புடம் போட்டு ஒளிர வைக்கின்றன எனத்திடமாக நம்புகிறேன்.

**3. இப்பணித்தளத்தின் மூலம் மீண்டும் உயிர் பெற்று ஈழகலைஞர்களுக்கான திட்டமிடல்கள் எவை?**

கலைஞர்கள் வெறுமனே கலைகளைப் பிரசவிப்பவர்கள் மட்டுமல்ல. கலைஞர்களே காலத்தைக் கணிப்பவர்கள் கட்டமைப்பவர்கள். காலத்தின் விம்பங்களாக திகழ்பவர்கள். சமூகத்தில் புதிய சிந்தனை மாற்றங்களைத் தோற்றுவிப்பவர்கள். புதுமைகள் மலர ஊக்குவிப்பவர்கள். இயற்கையின் என்றென்றும் மாறாத உண்மைகளை விழுமியங்களை அவ்வப்போது உலகில் தோன்றி அவற்றை உணராத மானுடர்களுக்கு உணர்த்துபவர்கள். இவற்றையெல்லாம் கலைஞர்கள் என்போர் மனதிற் கொள்ள வேண்டும்.

இவற்றை நோக்கிய தேடலும் முயற்சியுமே ஒரு கலைஞன் காற்றில் அலையுண்டுமாயும் சருகா, இல்லை காலமெல்லாம் கலையாமல் வாழும் கல்வெட்டா என்பதனைத் தீர்மானம் செய்யும்.

ஒரு கலைஞனின் தேடல் மிக்க ஆத்மார்த்தமான கலை ஈடுபாடே அவனைசாகாவரம் பெற்றவனாக அல்லது காலத்தை வென்ற கலைஞனாக மாற்றி வைக்கும். இவ்வாறான கலைகளை, கலைஞர்களை எவரும் திட்டமிட்டு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்வது போல தயாரிக்க முடியாது. திட்டமிட்ட கலை வளர்ப்பு கலை வார்ப்பு "இழையவளர்ப்பு" போன்ற ஒரே மாதிரியான, பிரதி செய்யப்பட்ட, உயிர்ப்பற்ற, செயற்கையான, படைப்புகளையே தோற்றுவிக்கும்.

எனவே கலைஞர்களை கலைஞர்களாக பார்க்கும், அவர்களின் "பல்வகைத் தன்மையை" ஏற்றுமதிக்கும், அவரவர்களின் தனித்துவ அடையாளங்களை, பார்வைகளைக், கருத்துக்களை போற்றும், அங்கீகரிக்கும், மனப்பாங்கை செயற்பாட்டை வளர்ப்பதே கலைகளை, கலைஞர்களை உயிர்த்தெழ வைப்பதற்கான தீர்வுகள் என நம்புகிறேன்.

**4. யாழ் மாநகரின் எதிர்காலத் தேவைகளை நிறை வேற்ற டயஸ்போரா போன்ற வெளிநாட்டுப் பங்களிப்பு எந்தவகையில் உதவலாம்?**

எமது வளங்களில் மிக முக்கியமான வளங்களில் ஒன்றாக புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பைக் கருதலாம். அவர்களின் பங்களிப்பு இல்லாது இருந்திருப்பின் போருக்குப் பின்னரான எமது மீண்டெழுகை இவ்வளவு சாத்தியமாகி இராது.

ஆனால், இதில் சில பாதக அம்சங்களும் உள்ளன. புலம்பெயர் உறவுகளின் நேரகாலம், பனிமழை, பாராத கடின உழைப்பை உறுஞ்சிக் கொண்டு தாய்நிலத்தில் சும்மா இருந்து கொண்டு சோக்குக் காட்டும் ஒருதலை முறையும், உழைப்பின் உண்மைப் பெறுமானத்தை உழைப்பின் களைப்பை சுகத்தை உணராத ஒரு சந்ததியும், இன்று உருவாகியுள்ளது. இது மாற்றப்பட வேண்டும்.

கடின உழைப்பால் கல்வியால் மாத்திரம் ஒரு காலத்தில் முன்னுதாரணமாக உயர்ந்து திகழ்ந்த ஒரு இனத்தில் இன்றைய இந் நிலை துரதிஷ்டவசமானது. எனவே சுமார் முப்பது வருடத்திற்கு மேலாக புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்களின் அறிவும் அனுபவமும் திருவும் எம் குறைகளை நிரப்ப நிச்சயம் உதவும். உதவ வேண்டும் என்பேன்.

மேலும், புலம் பெயர்ந்து இன்று எம்மண்ணில் முதலீடு செய்யும் பலர் சுய நலத்தோடுதத்தம் பொருளாதாரத்தை இங்கு மேம்படுத்தவே முயல்வதாகப்படுகிறது. யுத்தத்தில் நொந்த சமூகம் சார்ந்து எமது இன முன்னேற்றம் கருதி உதவும் புலம் பெயர் உறவுகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். இந்த நிலைமையும் மாற ஒருங்கிணைந்த செயற்பாடு விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும் என கருதுகிறேன்.



திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் ஆணையாளர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார் அதில் ஆசிரியர் ஒருவரிற்கு பரிசு வழங்குவதைக் காணலாம்.

**5. ஒரு விஞ்ஞானப் பட்டதாரி ஆகிய தாங்கள், கலைப் பயணத்தில் பிரபலமாக பேசப்படும் ஈழத்துக் கவிஞராக மிளிர ஊன்று கோலான, ஆர்வ மிகுதியாக அமைந்தது, எது என்பது பற்றி குறிப்பிடுவீர்களா?**

விஞ்ஞானம் பயின்றவர்களுக்கு மட்டும் கூர்ந்து நோக்கும் தன்மையும் ஆர்வமும் தேடலும் அமையும் என்று கூற முடியாது. எனக்கு விஞ்ஞானக் கல்வியிலும் கலைத்துறையிலும் ஒரே நேரத்தில் சமாந்தரமான இயல்பான விருப்பம் ஏற்பட்டிருந்தது. அதனாற் தான் விஞ்ஞானப் பட்டதாரியாகவும் கலைஞனாகவும் ஒரே வேளையில் என்னால் பரிணமிக்க பயணிக்க முடிந்தது. எனது விஞ்ஞானப் பின்னணி எனதுபார்வைக் கோணத்தில் என்னை அறியாமலேயே எனக்குள் செல்வாக்கு செலுத்தியும் இருக்கலாம்.

அனாலும் கவிதைத் துறையில் எனக்கு அதிகமான ஆர்வத்தை ஈடுபாட்டை ஏற்படுத்தியது, மனநெருக்கத்தைத்தந்தது, நவீன விஞ்ஞான ரீதியானதல்லாத எமது நீண்ட தொடர்ச்சியான மரபின் மீதான இயல்பான பற்றும் ஈர்ப்பும் விருப்பமுமே.

**6. ஒரு கவிஞராக எமது சமூக இளையோருக்கு தாங்கள் கூற விளைவது?**

ஒவ் வொருவரும் ஏதோ ஒரு கலையுடன் தொடர்பு பட்டிருப்பது, அதனைப்பயில்வது, அதனை இரசிப்பது, அவரவரின் உடல் உள ஆரோக்கியத்துக்கு அவசியமானது என்பதனை இன்றைய நவீன விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. "ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று எளிது" என்பார்கள். எல்லாவற்றையும் எல்லோரும் செய்ய முடியாது. அவரவர்கள் தமக்கு இயல்பாகத் தோன்றும், நாட்டம் கொள்ள வைக்கும், கலைகளுடன் ஊடாடுவது அவரவரின் தனிப்பட்ட வாழ்வுக்கு நிச்சயம் உதவி புரியும்.

இன்றைய இளையோர் பலர் திசை மாறிப் போவதற்கும் எது சரியான உண்மையான கலை என்பதை அவர்கள் இனங் காணாதிருப்பதே காரணம் என்பேன். சரியான, உண்மையைப் பேசுகின்ற, வாழ்வை மனதை பக்குவப்படுத்தி மேம்பாடடையச் செய்கின்ற, அவரவர்களுக்கு இயல்பாக வருகின்ற, அவர்களுக்கு உண்மையான இரசிப்பை மகிழ்வை ஏற்படுத்துகின்ற, கலைகளை அனைவரும் பயில, இரசிக்க, உருசிக்கப், பழக வேண்டும்.

கலைகளின் அரசி கவிதை. உலகவரலாற்றிலும் தமிழர்களின் வரலாற்றிலும் கவிதை ஆற்றிய பங்களிப்பு மிக மிகப் பாரியது. அப்படியான எமது நீண்ட பாரம்பரியத்திலிருந்து இன்று வரையிலான கவிதைகளை பயில்வதும் இரசிப்பதும் அவற்றின் வழி செல்ல முயல்வதும் எமக்கும் எமது சந்ததிகளுக்கும் நிச்சயமாக பெரும் நன்மையைத் தந்தே தீரும்.

நேர்காணல்
தர்மினி ரஜீவன்

அசைந்தாடும் காற்றுக்கும் நதிசேரும் கடலுக்கும் காதலா. பூவுக்கும் வண்டுக்கும் காதல், தாய்க்கும் சேய்க்கும் காதல், நண்பனுக்கும் நண்பனுக்கும் காதல், கம்பனுக்கு ஒரு காதல் இராமாயணத்திலே, வள்ளுவனுக்கு ஒரு காதல் திருக்குறளிலே. காதல் உயிரினங்கள் இயற்கை அழகுகள், அனைத்திற்கும் ஒன்றோடொன்று கருத்தொருமிக்க காதலர் என்றால் அன்றில் பறவையென காலமெல்லாம் விழித்திருந்து குடும்பத்தைப் காத்து தனிப் புகழ் சேர்க்கும் இருமனம் சேர் குடும்பம் இனிய இல் வாழ்வினிலே

G.பேணடேற்
கொழும்புத்துறை

# காதலர் தினம்

நிலைத்து வாழ்வதே குடும்பம் எனும் கதம்பம் இதில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் என்பதே ஆதியில் இருந்து நடைமுறையாகின்றது. இதன் விழைவாகவே மாசித்திங்கள் 14 ம் நாள் கொண்டாடுகின்றனர். இத் தினம் காதலர்களிற்கு மட்டுமல்ல திருமணம் செய்தவற்கு மட்டுமல்ல பிள்ளைகுட்டிகள், பொன், பொருள், சொந்தம், பந்தம், அன்பும், அரவணைப்பும், அன்பர், நண்பர், ஏழை எளியவர் என பலதரப்பட்ட வாழ்க்கை முறையை மேம்படுத்தும் ஒரு கருவியாக விளங்குகின்றது.

காதலிப்பதும் கைவிடுவதும் மனம் அங்கலாய்ப்படைந்து கூடுவிட்டு கூடு பாய்வதும் மனித உள்ளத்தில் பேதலித்த மனப்பாண்மையும் எம்மவரிடையே துல்லியமாக பரவிக்கொண்டே வருகின்றது. பெற்றோரின் அனுமதி இன்றி தம் வாழ்வை தாமே பாழாக்கிக் கொள்வதும் எமக்கு மட்டும் தான் காதலர் தினம் என கைகொட்டி சிரிப்பதும் எம் சிறுவரிடையே பரவி வரும் பண்பாடாகவுள்ளது. திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்ற முது மொழியை மேற்கொண்டு காதல் அத்திவாரமானது. இறுதி வரை உறுதியாக இருக்க வேண்டும் என்று பெரியோர்கள் நான்கு பேரிற்கு அறிவித்து சமய முறைப்படி சடங்குகளை நிலை நாட்டி வருகின்றனர். தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு வாழ்வை ஆரம்பித்து எத்தனை மன முறிவுகள் இடை நடுவில் பிரிக்கப்பட்டு வாழ்க்கைகளும் பல தரப்பட்டதாக அலைந்து போகின்றது. காதலித்தல் கௌரவம் என்றும் காதலிக்காதவரிற்கு கௌரவக்குறைவு என்றும் மனம் போன போக்கில் தம்மையே ஏமாற்றுகின்றார்கள்.

கணவன் மனைவி என்றால் அனுசரித்துப் போக வேண்டும். குண இயல்புகளிற்கு ஏற்றவாறு விட்டுக்கொடுக்கும் மனப்பாண்மையை அமைத்துக் கொள்வதும் உயிர் உள்ளவரை பிரமானிக்கமுள்ளவர்களாக வாழ்வது தான் தலையாய கடமையாதும்.என்பதைக் கருத்திற்கொண்டு எம்மை சூழவுள்ளவர்களையும் எம்மை நம்பி வாழ்பவர்களையும் கவனத்தில் கொண்டு வர வேண்டும் காதலர் தினம் என்பது வாழ்வில் புனிதமான தினமாகக் கருதப்படுகின்றது. எச் சந்தர்ப்பத்திலும் ஒருவரை ஒருவர் விட்டுக்கொடாதபடி தோழோடு தோழ் நின்று ஒத்துளைக்க வேண்டும். தமது சுய நலங்களிற்காக தமது சுய விருப்பு வெறுப்பிற்காக தம்மையே ஏமாற்றி நடுக்கடலில் நங்கூரமின்றி தத்தளிக்கும் படகினைப் போன்று காலத்தைக் கழிக்கின்றனர். எத்தனை பேர் பைத்தியம் பிடித்து மன உழைச்சலினால் பாதிப்படைகின்றனர். ஏறக்குறைய எமது சமூகத்தினர் இல்லற வாழ்வை இழிவு படுத்துகின்றார்கள் என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

ஐந்தறிவு படைத்த மிருகங்களை விட ஆறறிவு படைத்த மனிதர்கள் மேலானவர்களல்லவா?

இழமையாயினும் முதுமையாயினும் மனிதன் உட்பட உயிரினங்கள் அனைத்திற்கும் தனித்துவமான இணைப்பு ஊடுருவிச் செல்கின்றது. இந் வகையில் காதல் என்பது விரும்புவது ஒருவரை ஒருவர் நேசிப்பது இப்படியான பொன் நாளில் அன்பு செய்து குதூகலிக்க நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

எல்லோரிற்கும் உரிமை சொத்தான நன் நாளில் அன்பான ஒளிமயமான எதிர்காலத்தை அனு பவத்தில் கொண்டு வர வேண்டும். நல் வார்த்தை பேசுவதும் நன்றியோடு பழகுவதும் மனித மாண்பு போற்றப்படுவதும், இல்வாழ்வில் தான். அதுவே அனைத்தையும் ஒன்றினைக்கும் கருவியாகும். உயிர் உள்ளவரை தான் அன்புறவு நிலைத்திருக்கும் என்பதை சிரமேற்கொண்டு காதலர் தினத்தை மகிழ்ச்சியோடு வரவேற்போம்.



ஜோ.ஜெஸ்ரின்

# செவ்விளநீர்
## தாகம் தீர்க்கும் மருந்து

கட்டுப்பாட்டு விலை அறிவித்தும் தேங்காய் அதிக விலைக்கு விற்கப்படுகின்றது. இதற்குக் காரணம் வெளிநாட்டு பிஸ்கட் நிறுவனம் தேங்காயை மொத்தமாகக் கொள்வனவு செய்கின்றார்கள். வெளிநாடு செல்கின்ற தேங்காய் பிஸ்கட்டாக திரும்பி வருகிறது. அத்துடன் நாளாந்தம் ஐந்து ஆயிரம் செவ்விளநீர் ஏற்று மதியாகின்றது. இதனால் தான் தற்போது தேங்காய் விலை. அதே போலவே 120 ரூபாய்கு செவ்விளநீரையும் விற்கின்றோம். என்கிறார் யாழ் நகரப் பகுதியில் இளநீர் வியாபாரம் செய்யும் மகாலிங்கம் உதயகுமார்.



யாழ்ப்பாணத்து இளநீர் தரமானது அதன் நீர்ப்பிடிப்பு குறைவு. குருநாகல் இளநீர் நீர்ப்பிடிப்பு அதிகம். ஊர்முட்டை லைக்கோன் முட்டை மாதிரித்தான்.
வெளிநாடு போகும் தேங்காய்: பிஸ்கட்டாக திரும்பி வருகிறது. வெளிநாடு போகும் இளநீர்: அடைக்கப்பட்டு ஏற்றுமதியாகின்றது.

அராலி வீதி ஓட்டுமடம் பகுதியில் வசிக்கும் 40 வயதான மேற்படி வியாபாரி 24 வருடங்களாக இந்த வியாபாரத்தை செய்து வருகிறார். பாதை திறந்த பின் யாழ்ப்பாணத்து இள நீர்களின் மவுசு குறைந்து விட்டதாகவும் தற்போது குரு நாகல் பகுதிகளில் இருந்து கொள்வனவு செய்வதாகவும் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாணத்து இளநீர் தரமானது அதில் தண் ணீர்ப்பிடிப்பு குறைவு இரண்டு மூன்று இளநீர் குடித்தால் தான் தாகம் தீரும். ஆனால் ஊர் முட்டை குடித்தது போன்ற பலமாக இருக்கும். குருநாகல் இளநீர் லைக்கோன் முட்டை போன்றது. தண்ணீர்ப்பிடிப்பு அதிகமாகக் காணப்படுவதால் அவற்றிற்கு மவுசு அதிகமாகக் காணப்படுகின்றது.




## மறப்பதா? மன்னிப்பதா?



நண்பர்கள் தவறு செய்தால்
மன்னித்து விடாதே
மறந்துவிடு
ஏனெனில் அவர்கள்
உன் உறவுகள் அல்ல
உணர்வுகள்

ஜெ.அபிசாளினி
சென் றோக்ஸ் றோ.க வித்தியாலயம்

## தாயே..



கண்களில் இருக்கும் எந்தன் தாயே
என்னை நீ ஏன் பிரிந்தாய்
உயிரில் இருக்கும் எந்தன் அன்பே
என்னை நீ ஏன் மறந்தாய்
பூக்கும் பூவில் உந்தன் முகமே
கண்டு பிடித்து நான் அழுதேன்.

ஜெ.நந்துயா
சென் றோக்ஸ் மகாவித்தியாலயம்

## எது பலம்

வெற்றியை விடதோல்விக்கு பலம் அதிகம்
காரணம்
வெற்றி சிரிக்க வைக்கும்
தோல்வி
சிந்திக்க வைக்கும்

சு.சூரியா
யாழ் மத்திய கல்லூரி

## யாழ் களரிக்கு எழுதுங்கள்

"யாழ் களரி" மாதாந்த கலை, இலக்கிய, சமூக, அரசியல் இதழுக்கு படைப்பாளர்களிடமிருந்து செய்திகள், கட்டுரைகள், போன்ற பொதுத்தன்மை வாய்ந்த ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். படைப்புக்களை அனுப்பும் போது உங்கள் முகவரியை தவறாது குறிப்பிட்டு அனுப்பினால் ஆக்கங்கள் பிரசுரிக்க உதவியாக இருக்கும். "யாழ் களரி" மாதாந்தப் பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.



தொடர்புகளிற்கு:
ஆசிரியர்,
யாழ் களரி,
28/1, A.V வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல்:
Yarlgallery@gmail.com

கட்டுரை

# ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரான வடக்கு மற்றும் கிழக்குத் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு விவகாரங்கள்

அருட்தந்தை கி.ஜோ.ஜெயக்குமார்

*(கடந்த இதழ்த் தொடர்ச்சி...)*

போருக்குப்பின்னரான மீள்குடியமர்வு சூழமர்வில், மீண்டும் கிராமிய குறிச்சிகளிடையே ஒருங்கிணைந்த கூட்டுக்குடும்ப வாழ்வு ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லை. காரணமெதுவெனில், கணிசமானவர்கள் புலம் பெயர் அகதிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே பாரம்பரிய விழுமியங்கள், நியமங்கள் பேணப்படுவதற்கான சாத்தியம் குறைவடைந்துள்ளது.

### 3. (இ) சமூக உடைவு அல்லது ஒருங்கமைவின்மை

கோட்டன் (P.B.Horton) கன்ட் (CL Hunt) என்பவர்களின் கூற்றுப்படி சமூக ஒழுங்கு (Social order) என்பது, மக்களின் செயற்பாடுகளிற்கும், நடத்தைக் கோலங்களுக்குமிடையேயுள்ள ஒரு ஒழுங்கு முறைமையே. உதாரணமாக நகரங்களில் பல்லாரக்கணக்கான வாகனங்கள், விபத்துக்களின்றி ஓடிக்கொண்டேயிருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வெவ்வேறு இடங்களில் உழைத்து, மக்களின் அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தவண்ணமிருக்கின்றனர்.

சமூகத்திலுள்ள தனி நபர்கள், தங்கள் வகிபாவங்களையும், கடமைகளையும், மற்றவர்களுக்காக செய்யும் போதும், ஒருவரொருவருடைய உரிமைகள் மதிக்கப்படும் போதும், சமூக ஒழுங்கு சமுதாயத்தில் பேணப்படுகின்றது. பெரும்பான்மையான மக்கள் கடமைகளையும் உரிமைகளையும் மதித்து செயல்படும் போது சமூக ஒழுங்கு ஏற்படுகின்றது. மக்கள் இப்படிச் செயல்படுவதற்கு சமூகத்தில் காணப்படும் பொறிமுறையாக 'சமூகக் கட்டுப்பாடுகள்' (Social control) அமைகின்றது.

சமூக ஒழுங்கு என்பது சமூக ஸ்திரத்தன்மையிலும் (Social stability) தங்கியுள்ளது. துர்க்கையீம், பர்சன் போன்ற சமூகவியலாளர்கள், நிகழ்காலத்திற்கும், கடந்த காலத்திற்குமிடையே தொடர்ச்சி (Continuity) காணப்படாதுவிடின் சமூக ஒழுங்கு இருக்க மாட்டாது என்பர். மேலும் சமூக ஒழுங்கிற்கும் மாற்றங்களுக்குமிடையே இணைப்பு உண்டு. சமுதாயம் என்பது இயங்கியல் தன்மை கொண்டது. எனவே மாறிக்கொண்டேயிருக்கும். சமூக ஒழுங்கிற்கும், மாற்றத்திற்குமிடையிலான தொடர்பு முரண்பாடானது அல்ல. ஆனால் அதிவேகமாக அமையுமானால் சமூக அமைப்பானது அதன் ஒழுங்கை (order) இழந்து, சமூக உடைவிற்கு வழிவகுக்கும்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் போரின் காரணமாக இச் சமூக ஒழுக்கத்திற்கான தன்மைகள் பல வழிகளில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. போரின் காரணமாக, மாற்றங்கள், படிப்படியாக அமையாது, துரிதமாக நடைபெற்றுள்ளது. சமூக ஸ்திரத்தன்மை குலைக்கப்பட்டுள்ளது. சமூக விழுமியங்கள், நியமங்கள், வழக்காறுகள் கடைப்பிடிக்கப்படவில்லை. இதன் காரணமாக சமூக ஒழுங்கு பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

### 4. சமூகத்தில் போரின் தாக்கங்களும் விளைவுகளும் (Impact and Outcome)

போரின் தாக்கங்களாக, நியமமறு நிலை, பண்பாட்டு முரணியல் நிலை, சமூக உடைவு அல்லது ஒழுங்கமைவின்மை போன்ற விவகாரங்கள் பற்றி சுருக்கமாக மேலே பார்த்தோம். இவற்றின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளை (நாம் பார்த்த சட்டகத்தில் மூன்றாம் நிலை) சுருக்கமாக நோக்குவோம்.

இலியட் ஆர்சன் (Eliot Arason, 1960) என்பவரின் 'சமூக இம்மைப்படுத்தல்' (theory of social deprivation) கோட்பாடு போரின் விளைவுகளை விளங்கிக்கொள்ள உதவியாக அமைகின்றது. சமூக இன்மைப்படுத்தல் என்பது சமூகப் புலங்களில் நிகழ்ந்த போரினால் உருவாக்கப்பட்ட சமூகப் பொருண்மையாகும். சமூக இம்மைப்படுத்தலினால் ஏற்படும் தாக்கத்தினை சுருக்கமாக நோக்குவோம்.

4.1 உளச் சமூகத்தாக்கங்கள் (Psyco-social impact) சமூக உளவியலாளர்களின் நோக்கில் போரினால் ஏற்படும் தாக்கங்களும் விளைவுகளும் ஆழமாகவும் காத்திரமாகவும் அமைகின்றது என்பர். பாதிப்புக்குள்ளானவர்கள் உளப்பிறழ்வுக்கு உட்படுகின்றனர். அதாவது ஏக்கம், பதகளிப்பு, மனஅழுத்தம், போன்ற உளமந்த நிலையினை (mental retardation) இவை உருவாக்கின்றன. மேலும் போர்ச் சூழலில் சமூகமயமாக்கப்படும் இளம் சந்ததியினர் வக்கிர உணர்வுடன் காணப்படுவர். இதனால் இவர்களின் சொல், செயல் என்பவற்றில் எதிர் உணர்வைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலை காணப்படுக்றது. எமது சமூகத்தில் தற்போது காணப்படும் குழுச்சண்டைகள், போதைசஸ்துப் பாவனைகள் சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளாகக் கருதப்படுகின்றது.

போரின் சமூகவியலைப் புரிந்து கொள்ள "ஆளிடைக் கவர்ச்சிக் கோட்பாடு" (theory of Interpersonal attraction orbgain and loss theory) உதவியாகவுள்ளது. ஒருவருடன் நெங்கிப் பழகிவந்தாலும் வேறொருவர் இடையில் வந்து உங்களைப் புகழ்ந்து பாராட்டி சில வெகுமதிகளை அளிக்கும் போது புதியவரின் முக்கியத்துவம் பெரிதாகக் கணிக்கப்படுகின்றது. இங்கு 'ஆளிடைக்கவர்ச்சி' வலுப்பெறுகின்றது.

போர்ச் சூழலில் தப்பிப்பிழைக்கும் முகமூடி தவிர்த வாழ்க்கைக்கு நிர்பந்திக்கப்பட்டவர்கள் போர் முடிந்த சூழலிலும் சுயநலத்திற்காக சந்தர்ப்பவாத நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பது சமூகப் பொருண்மையாகக் காணப்படுகிறது. சூழலிற்கேற்ப தமது கருத்துக்கள், எண்ணங்கள் போன்றவற்றை மாற்றித் தப்பிப்பிழைக்கும் சமூகப் போக்குக் காணப்படுகின்றது. பந்தம் பிடித்தல், பதவிக்காக, பணத்திற்காக எதையும் சகித்துப்போகும் நிலை, போருக்குப் பின்னரான நடத்தைக் கோலங்களாக இருக்கின்றன. இந் நிலை எதிர்கால சந்ததியினரின் இருப்பைக் கேள்விக்குறியாக்குவது மட்டுமல்லாது, முயற்சியாண்மை (entrepreneurship) கடும் உழைப்புப் போன்ற உயர்ந்த விழுமிய வீழ்ச்சிக்குக் காரணமாக அமையும் நிலை போருக்குப் பின்னரான தமிழ்ச் சமூகத்தில் காணப்படுகின்றது.

*(முற்றும்)*


# கலாபூசணம் விருது பெற்ற இருவருக்கு பாராட்டுவிழா




செ.ஜோசப்பாலா


ராகஸ்வரம் கலை மன்ற ஆலோசகர் குழு உறுப்பினர்களான ஓவியர் கலாபூசனம் முத்தையா கனகசபை, எழுத்தாளர் செ.யோசப்பாலா ஆகியோருக்கு மேற்படி மன்றத்தால் கௌரவிப்பு விழா அண்மையில் கொழும்புத்துறையில் யாழ்களரி ஊடக இல்லத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கையில் மூத்த ஓவியர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"தமிழர்களின் தனித்துவமான கலையாக ஓவியத்துறையை வளர்ப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அது எம் இரத்தத்தில் இருக்கின்றது. ஊடகங்கள் தான் ஓவியங்களை பிரபல்யப்படுத்த வேண்டும். அதற்கு ஒரு அந்தஸ்தை கொடுக்க வேண்டும். அப்போதுதான் பெற்றோர்கள் பிள்ளைகளிற்கு ஓவியத்தை கற்றுக்கொடுக்க முன்வருவார்கள். எனது ஓவியங்கள் 18 யாழ் பொதுசன நூலகத்திலும், 21 ஓவியங்கள் யாழ் பல்கலைக்கழக நூலகத்திலும் ஒப்படைத்துள்ளேன். மாணவர்கள் அவற்றை தரிசிக்க வேண்டும் என்பதற்காகவே" என்றார். மூத்த ஓவியர் கலாபூசணம் மு.கனகசபையின் ஓவியங்கள் இதோ தரப்படுகின்றது.



மு.கனகசபை





# வெள்ளம் வறட்சிக்கு தீர்வுதான் என்ன?



நாவாந்துறையில் J/85 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்கள் சில வெள்ளம், வறட்சி இரண்டாலும் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கே குடிதண்ணீர் பிரச்சனை, பொது மல சல கூட வசதியில்லை, பொதுக்கிணறு ஒன்றுதான் இருக்கின்றது. அதுவும் உவர்தன்மையானது என வசந்தபுரம் அன்னை சனசமூக நிலைய தலைவர் மாரியப்பன் தவக்குமார் தெரிவித்தார்.

நாவாந்துறை பிரதேசத்தில் உள்ள வசந்தபுரம், நித்தியஒளி சாபிநகர், சூரிய வெளி ஆகிய கிராமங்கள் கடந்த 30 வருடங்களாக வெள்ளப்பிரச்சனை மற்றும் வறட்சி போன்ற பிரச்சனைகள் தொடர்கதையாகவுள்ளது. பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள் காலத்துக்குக் காலம் இப்பிரதேச மக்களின் நிலைமையை வெளிக்கொணர்கின்ற போதும் அரச அரசியல் பிரமுகர்களாலும் நிரந்தர தீர்வை ஏன் பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்பதை J/85 கிராம சேவகர் அ.சர்வேஸ்வரனிடம் கேட்டபோது அவர் தெரிவித்த விடயங்கள். தனியார் காணிகள், வயல் நிலங்களில் அத்துமீறி குடியேறி நீண்டகாலமமாக மேற்படி பிரதேச மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இன்னொருவருக்கு சொந்தமான காணிகளில் அத்துமீறி இருப்பதால் அரச மட்டத்தில் உதவிகள் வழங்கப்பட முடியாத சூழல் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் O/L படித்ததும் படிப்பை நிறுத்திவிடுகின்றனர். இளவயதுத் திருமணங்கள் அதிகரித்துக் காணப்படுகிறது. இரும்புகள் பொறுக்கும் வேலையை சிலர் செய்கின்றார்கள். சிலர் ஏதும் கூலி வேலைகளுக்கு போகின்றார்கள். சிலர் கடற் தொழிலில் கூடு போட்டுள்ளார்கள். அனேகமான கூடுகள்தான் காணப்படுகின்றது. 800 ரூபாய் உளைத்தால் பாதிக்காசுக்கு குடித்து விடுகிறார்கள். குடிபோதைப் பிரச்சனையும் அதிகமாக பாதிப்புகளை உருவாக்கியுள்ளது.



சூரிய வெளி பகுதிக்கு வீடுகள் கிடைத்து ஓரளவு சீராக காணப்பட்டாலும் ஏனைய மூன்று கிராமங்களும் அடிப்படை வசதிகளற்றுக் காணப்படுகிறது. பிரதேச செயலகம் குறிப்பிட்ட அளவுதான் உதவி செய்ய முடிகிறது. குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. தண்ணீர்க் குழாய்களில் தண்ணீர் வருவதில்லை. தற்போது பவுசர்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது என்றார் கிராம சேவகர் அ.சர்வேஸ்வரன்.



குடிதண்ணீர் தொடர்பாக யாழ் மாநகரசபை ஆணையாளர் குளாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். இது போன்று வெள்ளப் பிரச்சனைக்கு யாழ் பிரதேச செயலர் உழவு இயந்திரங்கள் மூலம் மணல் கும்பிகளை வெள்ளப் பாதிப்பு உள்ள வீடுகளிற்கு வழங்கியதாகவும் தெரிவித்தார். அத்துடன் சுகாதாரம், கல்வி, போசாக்கு போன்ற பிரச்சனைகளும், பாடசாலை இடைவிலகல், இளவயதுத் திருமணம், தொழில் வாய்ப்புக்கள் இன்மை, மதுபோதைக்கு அடிமையாகுதல் இவைகளிலிருந்தும் இப்பிரதேச மக்களை மீட்க வேண்டியுள்ளது.



## அமைதி ஓங்க வன்முறை நீங்கட்டும்

காலத்தின் கட்டளையில் சிக்குண்ட மக்கள்
கண்டதுயர் எல்லாம் இங்கு வன்முறையினாலே
நாட்டுக்கு நாடு போர் முழக்கங்கள்
நாடிழந்து சுதந்திரம் இழந்து நலிந்தனர் மக்கள்!

கண் இழந்து காது இழந்து கை கால் இழந்து
கதறி நின்றார் நம் சோதரர்கள் வன்முறையினாலே
வேலை இல்லாத் திண்டாட்டம் பட்டினிச்சாவு
வேண்டுவது லஞ்சம் பிறர் உடமையாவும் - கொலை

வெறி கொண்டான் கற்பினைக் கழைந்தான்
கொடுமை நிறை வாழ்வினிலே கனவிலும் ஏக்கம்!
அயலவர் வாழ்வில் வெந்து நின்றான் கயவன்
அனாதைகளாக அலையவிட்டான் தாய் மண்ணில்!

உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாம் சாதிமதம்
உலகினிலே ஒழிந்திட வன்முறை நீங்கட்டும்!
அகிலம் போற்றும் உத்தமன் காந்தி போல்
அறநெறி புரிந்து பிறர் அன்பு கொள்வீர்!

அமைதி வாழ்வு மண்ணில் மலர்ந்திட
அருளும் பண்பும் ஒன்றாய் இணைந்திட
பார்புகழும் நாடாக நாம் நிலைத்திட
பாரினிலே வஞ்சகர்கள் மறைந்திட வேண்டும்.

அழகு கொண்ட நம் நாட்டில் வன்முறை நீங்கி
அமைதி ஓங்க வன்முறை நீங்கட்டும் என்று
அன்பு உள்ளம் கொண்ட மக்கள் ஒன்று கூடி
ஆடிப்பாடி மகிழ்ந்திடலாம் அருள் கொண்டு.

டே.மரிய லூர்த்து நாயகி

## அவதாரம்

உங்கள் காலடியில்
சிறகசைக்கும் மின்மினியின்
சிறு வெளிச்சத்தை நசுக்காதீர்

எங்கள் மாடங்களில் ஒளிரும்
தீப்பந்தங்களை விட
அதிலிருந்து வெடித்துப் பறக்கும்
அக்கினிச் சிறுவண்டுதான் இது
சூரிய ஒளி பொய்த்த
காரிருள் எங்கும்
ஒளியேற்றும் சேவையிது

கலை வானத்தில் ஆயிரம்
விண்மீன்களை உருவாக்கவே
வீட்டில் பூச்சியின் அவதாரம்
ஈச்சம் காடுகளைத்தேடும்
தீக்குச்சிப் பறவையின் எத்தனம்
இருளுக்கு மட்டுமே வெளிச்சம்

தமிழ் உதயம்

## ஆற்றுப்படுத்தலுக்கான தொடர்பு படுத்தலுக்கான நீர்

பெறுமதியான இதயம்
வானத்திலுள்ள முகில்களைப் போன்றது

இன்று நீங்கள் எங்களை காப்பாற்றுங்கள்
நாளை நாங்கள் உங்களை காப்பாற்றுகின்றோம்

உன் உயிரை காக்கும் வழி அறிந்தால்
எதைச் செய்வாயோ
அதையே சமூகத்திற்கும் செய்
அன்புடன் ஆற்றுப்படுத்து
நீரை தொடர்பு படுத்து
இறைவனின் அன்பே நீர்

ரேகினி
ஹட்டன்

## கடமையே மனிதனுக்கு அழகு

குழந்தை சிரிக்கும் சிரிப்புத்தானே கொள்ளை அழகு
கோயில் தெய்வம் காட்டும் சிரிப்பும் கொள்ளையழகு
பழங்கள் எம்மைப் பார்க்கும் போது கொள்ளையழகு
பாட்டி கதைகள் சொல்லும் போது கொள்ளையழகு.


கடமை செய்யும் போது மனிதன் கொள்ளை அழகு
கதிரவன் எழும் காலைப்பொழுது கொள்ளை அழகு
படம் எடுக்கும் நாகபாம்பும் கொள்ளை அழகு
பால் தரும் அந்தப் பசுவும் கன்றும் கொள்ளையழகு.

அன்பைக் காட்டும் போதுதானே அம்மா அப்பா அழகு
ஆசிரியர் தன்னைமறந்து போதிப்பதுவே அழகு,
இன்பநிலை எய்திட்டால் எல்லோருமே அழகு,
இந்த மண்ணை அலங்கரிப்பதுதான் கல்வியழகே அழகு.

வயல்களில் பயிர்விளையும் போது கொள்ளை அழகு,
வறுமை விட்டு விலகும் போது வாழ்வும் அழகு
மயில் நடனமாடும் போது தோகை அழகு
மாணவர்களை பாதுகாத்தல் எதிர்காலத்திற்கழகு.

கே.எஸ்.சிவஞானராஜா

## மட்டக்களப்பில் பொங்கல் விழா



மட்டக்களப்பு பட்டிருப்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.மௌனகுரு கலந்து சிறப்பித்தார். இதில் பல் சமய பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# தலைவரராக நான் மாற

ஆர். கினுஜா
தரம் 10, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்

பரந்த இவ்வுலகில் இறப்பும் பிறப்பும் சகஜம். வாழ்க்கை என்பது சுழல் சக்கரம் போன்று உருண்டோடிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் ஒரு குழந்தை பிறக்கின்றது. அவன் பிறக்கும் போதே நல்லவனாகவே மாசுமறுவற்ற மனம் படைத்தவனாகவே பிறக்கின்றான். அவன் வளரும் போது பலவித வடிவங்களிலே வளர்ச்சி பெற்று நல்லவனாகின்றான். அறிஞனாகின்றான், உத்தமனாகின்றான், தலைவனாகின்றான். எனவே அவனது குழந்தைப் பருவத்திலிருந்து அவனது வளர்ப்பே அவனது உயர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றது. அங்ஙனம் வளர்ச்சி பெறும் ஒருவன் சிறுவனாகி, இளைஞனாகி, தலைவனாக மலர்கின்றான். இக்கருத்தினடிப்படையில் நோக்கும் போது இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்ற கூற்று ஏற்கக்கூடியதே. ஆனால், இளைஞர்கள் அனைவரும் நாளைய தலைவர்கள் என்று கூறி விட முடியாது. வளரும் பயிர் அதன் வளர்ச்சிப் பருவத்தில் பூச்சி, புழுக்கள் போன்றவற்றால் தாக்கமுற்றுக் கருகிப்போவதும் உண்டு. அதே போன்று வளரும் பருவத்தில் இளைஞர்கள் அத்தகைய தாக்கத்தினை அடையாது. நல்லவர்களாக, ஒழுக்க முள்ளவர்களாக வளர்க்கப்பட வேண்டும். கல்வியும் ஒழுக்கமுமே இதற்கு அடிப்படையாக அமைவனவாகும். நல்ல கல்வி அறிவினைப் பெறும் இளைஞன் நல்லொழுக்கமுள்ளவனாகத் திகழ்வான். இங்ஙனம் கல்வியும் ஒழுக்கமும் அமையப் பெறும் இளைஞர்கள் நாளைய தலைவர்களாக தலைநிமிர்ந்து வாழமுடியும் என்பதில் ஐயமில்லை. இன்றைய சூழ்நிலையில் இளைஞர்கள் பலர் பல்வேறு தாக்கங்களுக்கு ள்ளாகின்றனர் படித்தும் வேலைவாய்ப்பின்மை, தகுந்த தலைமைத்துவம் இன்மை, அரசியல் குளறுபடிகள் என்பனவற்றால் விரக்தியின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவதை நாம் நிதர்சனமாகக் காண முடிகிறது. எனினும் வேதனைகளைச் சாதனைகளாக மாற்றிச் சரித்திரம் படைத்திட்ட இளைஞர்கள் சிலரையும் நாம் காண முடிகிறது. இளமைமையிலேயே இலட்சிய நோக்குடன் - குறிக்கோளுடன் இளைஞர்கள் வளர்வார்களேயானால் அவர்கள் எதிர் காலத்தில் நல்ல தலைவர்களாக உருவாக முடியும். நல்ல இலட்சியங்கள் நல்ல வழியைக் காட்டும். அவர்களது இலட்சிய வேட்கையும் விடா முயற்சியும் அவர்களது குறிக்கோளை எய்துவதற்குத் துணை செய்யும். இளைஞர்களைப் பொறுத்த

> “நல்லவன் என்று பெயர் பெறுவது மிகவும் கஸ்டம் - எனவே இளைஞர்கள் வாழ்வில் நல்லவன் என்ற பெயரினை பெற முயல வேண்டும்.”

வரையில் அவர்கள் கல்லூரிகளில் கற்கும் காலத்திலேயே தலைமைத்துவப் பண்புகளை கற்றுக் கொள்கிறார்கள். மாணவர் மன்றக் கூட்டங்களுக்கு தலைமை தாங்கும் போதும் விளையாட்டு மைதானங்களில் விளையாட்டு அணிகளுக்குத் தலைமைதாங்கும் போதும் மாணவர் தலைவராகச் செயற்படும் போதும் தலைமைத்துவப் பண்புகளைப் கற்றுக் கொள்கிறார்கள். சாரணர் இயக்கம், சென்ஜோண்ஸ் அன்புலன்ஸ்சங்கம், செஞ்சிலுவைச் சங்கம், ராகஸ்வரம் கலைமன்றம் போன்ற சமூக இயக்கங்களில் பங்கு கொள்வதன் மூலமும் இளைஞர்கள் நல்ல பண்பு

ஒளி படைத்த தலைவர்களாக மின்னிக் கொண்டிருக்கும் தலைவர்கள் பலரை நாம் அறிவோம். அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பின் அவர்கள் இளமை முதலே கொண்ட குறிக்கோளை எய்துவதற்காக அல்லும் பகலும் அயராது முயன்றுள்ளமையை காணலாம். அவர்கள் இளமைப் பருவத்தே கொண்ட இலட்சிய வேட்கையே இறுதியில் உலகம் போற்றும் தலைவர்களாக அவர்களை உருவாக்கிய தென்பதை உணர்ந்திட முடியும். மகாத்மா காந்தியடிகள், ஆபிரகாம் லிங்கன், வின்சன் சேர்ச்சில், நெப்போலியன் போன்றோர் இதற்கு ஏற்ற எடுத்துக் காட்டுகளாகும். மனிதராகப் பிறந்தவர் எவர்க்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருந்தல் வேண்டும். குறிக்கோளற்றோர் மாண்டவர்க்குச் சமமானவர். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற இலட்சிய முடையவர்களே வாழ்வில் வெற்றி காண முடியும். இத்தகைய குறிக்கோள் கொண்ட இளைஞர்கள் வாழ்வில் நன்னிலை பெறுவர். கெட்டவன் என்று பெயர் பெறுவது மிகவும் எளிது. ஒரு சில நிமிடங்களிலேயே அப்பட்டத்தை பெற்றிடலாம். ஆனால் (நல்லவன் என்று பெயர் பெறுவது மிகவும் கஸ்டம் - எனவே இளைஞர்கள் வாழ்வில் நல்லவன் என்ற பெயரினை பெற முயல வேண்டும்.) நல்லவன் என மக்கள் போற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழும் இளைஞர்கள் நாளைய தலைவர்களாவது திண்ணம். எனவே இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்களாக மிளிர வேண்டுமாயின் அவர்கள் நல்ல கல்வியறிவும், நல்ல ஒழுக்கமும், பிறர் நலம் பேணும் பண்பும் உள்ளவர்களாக நல்ல குறிக்கோள் படைத்தவர்களாகும் தகுதி அவர்களது வாழ்க்கை நெறியிலேயே பெரிதும் தங்கியுள்ள தென்பதையும் மறக்கக்கூடாது.

# சுயதொழிலுக்கான உதவித் திட்டம்

வடகிழக்கில் உள்ள மாற்றுத் திறனாளிகள், போரால் பாதிக்கப்பட்டு இதுவரை எந்த உதவியும் பெற்றுக் கொள்ளாதவர்கள், கைவிடப்பட்ட முதியோர் - சிறுவர்கள், விசேட தேவைக்குரியவர்கள் போன்றோருக்கு உதவும் முகமாக சுயதொழிலுக்கான உதவித்திட்டம் யாழ் களரி மற்றும் காந்தள் புலம்பெயர் இளையோர் ஊடாக அறிமுகப்படுத்தப்படுகிறது. பின்வரும் விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து நீங்கள் குறிப்பிடப்படும் பாதிப்புக்கான ஆவணங்களையும், தேசிய அடையாள அட்டைப் பிரதியும், குடும்ப அட்டைப் பிரதியும் கிராம சேவகரின் உறுதிப் படுத்தலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தொடர்புகளுக்கு : 077 6510375

விண்ணப்பங்களைப் பெற

yarlgallery@gmail.com
kanthalpi@gmail.com

## சுயதொழிலுக்கான உதவி கோரல்

| | | | |
|---|---|---|---|
| 01 பயனாளியின் முழுப்பெயர் | | | படம் |
| 02 நிரந்தர முகவரி | | | |
| 03 தற்போதைய முகவரி | | | |
| 04 நிரந்தர முகவரி | | | |
| 05 தொலைபேசி இல | | மின்னஞ்சல் | |
| 06 கிராமசேவையாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு | | மாவட்டம் |
| | | | |
| 07 தேசிய அடையாள அட்டை இல | தற்காலிக அடையாள அட்டை இல | | மாற்றுத்திறனாளி அடையாள அட்டை இல |
| | | | |
| 8. பிறந்த திகதி | பால் | | திருமணமானவரா |
| / / | ஆண் / பெண் | | ஆம்/இல்லை |

9 குடும்ப விபரம்

| பெயர் | பிறந்த ஆ. மா. தி | உறவுமுறை | தொழில் | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

10 நீங்கள் மாற்றுத் திறனாளியா- ஆம்/இல்லை

எவ்வகையான மாற்றுத் திறனாளி ..........

ஏற்பட்ட சம்பவம் ..........

ஏற்பட்ட திகதி ..........

தற்போது நீங்கள் பயன்படுத்தும் உபகரணம் ..........

11. விண்ணப்பதாரியில் தங்கிருப்பவர்களின் எண்ணிக்கை ..........

12 தொழில் ..........

இதற்கு முன் சுயதொழில் உதவி கிடைக்கப்பெற்றதா? ஆம்/இல்லை

உதவிய நிறுவனத்தின் பெயர் ..........

எத்தகைய உதவி ..........

தற்போது அரசினால் கிடைக்கப்பெறுகின்றதா ..........

எத்தகைய உதவி ..........

தங்களால் கோரப்படுகின்ற சுயதொழில் உதவி என்ன ..........

சுயதொழில் பயிற்சி ஒன்றினை பெற்றுள்ளீர்களா ..........

எத்தகையபயிற்சி ..........

13 கோரப்படுகின்ற சுயதொழில் தொடர்பான மதிப்பீடு ..........

14 வங்கி விபரம்

| வங்கியின் பெயர் | கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | கணக்கு இல |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

மேற் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் உண்மையென்பதையும் எனது அறிவுக்கெட்டியவகையில் சரியெனவும் உறுதியளிக்கிறேன்

.......... ..........
விண்ணப்பதாரியன் கையொப்பம் திகதி

மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரியினால் நிரப்பபட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் அரசினால் அல்லது வேறு நிறுவனங்களினால் இதற்கு முன்னர் சுய தொழில் உதவி கிடைக்கவில்லை என்றும் அவருக்கு சுயதொழில் ஆரம்பிப்பதற்கு இடத்தெரிவு அறிவு பொருத்தமான சூழல் சந்தைப்படுத்தல் வசதிகள் என்பன இருக்கின்றன .......... ரூபா வழங்கலாம் என பிரேரிக்கின்றேன்.

.......... ..........
சமூக சேவை உத்தியோகத்தர்
அல்லது
கிராம சேவையாளர் திகதி

இணைக்கப்பட வேண்டிய முக்கிய ஆவணங்கள்
1.அடையாள அட்டை பிரதி
2.குடும்ப அட்டை பிரதி (சகல பக்கங்களும்)
3.மாற்றுத்திறனாளி உறுதிப்படுத்தும் அடையாள அட்டை பிரதி (அல்லது அது தொடர்பான ஆவணம்)
4.அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம்
5.வங்கி புத்தகப் பிரதி

## ராகஸ்வரம் கலைமன்றம்

### ராகஸ்வரம் கலைமன்றம் வழங்கும் இலவச பயிற்சிகள்

நாடகமும் அரங்கியலும், வசந்தன் ஆட்டம், தென மோடி நாட்டுக்கூத்து, ஆங்கிலம், சிங்களம், போட்டோ கிராபிக், ஓகன், தபேலா, வயலின், மிருதங்கம், வாய்ப்பாட்டு, ஓவியம் போன்ற நீங்கள் விரும்பும் பாடங்கள் இலவசமாக கற்பிப்பதற்கு மேற்படி எமது மன்றம் அனுசரணை வழங்குகின்றது. உங்கள் கிராமங்களில் உள்ள 10 பேர் சேர்ந்து விண்ணப்பிக்கலாம்.

### பல்சமய கருத்தாடல் நிலையம்

சமூக சேவையில் ஆர்வமுள்ள பல்சமயங்களூடாக அமைதிக்காக ஆக்கப்பணியாற்ற விரும்புகிறீர்களா? நீங்கள் எம்முடன் இணைய விண்ணப்பிக்கலாம்.

### யாழ் ராகஸ்வரம் இசைக்குழு

கோவில் திருவிழா, புதுமனை புகுவிழா, பூப்புனித நீராட்டுவிழா இருமனங்கள் இணையும் திருமணவிழா உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான விழாக்களில் யாழ் முன்னனி இசைக் குழுவினராகிய யாழ் ராகஸ்வரம் இசைக் குழுவினரை அழைத்து மகிழுங்கள் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் - ஈழத்தின் முன்னனி கலைஞர்களின் இசைச் சங்கமம்.

தொடர்புகளுக்கு:- 0776510375
jaffnarakaswaram@gmail.com

# யாழ் களரி வெளியீடு, அறிமுக நிகழ்வுகள்











யாழ் களரி வெளியீட்டுவிழா கோட்டை முனியப்பர் தேவஸ்தானத்தின் முன்றலில் 01.01.2018 அன்று மு.ப 10.00 மணிக்கு ராகஸ்வரம் கலை மன்ற செயலாளர் பல்துறைப் பேராளன் எஸ்.யேசுதாஸ் தலைமையில் நடைபெற்றது. பல்சமய கருத்தாடல் நிலைய சர்வமத பிரதிநிகளான அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அடிகள், சிவஸ்ரீ ஞானசேகர சர்மா, எம்.எல்.லாபீர் ஆகியோர் யாழ்களரி பத்திரிகையை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை எழுத்தாளர் கலாபூசணம் செ.யோசப்பாலா அவர்கள் பெற்றுக்கொண்டார்.











யாழ் ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ் நாகவிகாராதிபதி சிறி விமலதேரர் அவர்கள், நல்லை ஆதீன முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அசீஸ் மௌலவி, பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள், ஆகியோர் "யாழ் களரி" சிறப்புப் பிரதியினைப் பெற்றுக்கொண்டனர்















இப்பத்திரிகை ஜோ.ஜெஸ்ரின் என்பவரால காந்தள் புலம்பெயர் இளையோர் அனுசரணையில் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தில் 01.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது